விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 22 | ராபி ஆகி 24 | இதழ் 330
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 6-1-1986

## பேராசிரியர் சிவத்தம்பி ராஜினாமா?

(யாழ்ப்பாணம்)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இன்று அல்லது நாளை தமது ராஜினாமாவைச்சமர்ப்பிப்பார் எனத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினமும், நேற்றும் யாழ். நகரில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்தே அவர் தமது ராஜினாமாவைச் சமர்ப்பிக்கவிருப்பதாகப் பிரஜைகள் குழு வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்தன.

## சுங்க அதிகாரி கணேஷ் படுகாயம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நேற்று நிகழ்ந்த சூட்டுச் சம்பவத்தில் யாழ். சுங்கப்பகுதியைச் சேர்ந்த உதவிச் சுங்க கலெக்டர் திரு. எஸ். கணேஷ் படுகாயத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்

(5-ம் பக்கம் பார்க்க)

● யாழ்.நகரில் கண்காணிப்புக்குழுவினர் ● மக்கள் அல்லோலகல்லோலம்

# யாழ்.நகரில்நேற்றும் துப்பாக்கிசூடுகள்

# ஏழு பேர் பலி! 53 பேர் காயம்!

## காயமடைந்த ஆண்கள் இடவசதி இல்லாது பெண்கள் வார்ட்டில் அனுமதி!

## 29 இளைஞர்கள்நேற்றிரவுஇரத்தம்வழங்கினர்!

(கா. யோகநாதன்)

**யாழ். நகரில் நேற்றுப் பிற்பகல் நடந்த தரைத்தாக்குதல், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இரு பெண்கள் உட்பட ஏழுபேர் பலியானார்கள்! இரு பெண்கள் நான்கு சிறுவர்கள் உட்பட 53 பேர் காயமடைந்தனர். யாழ். பஸ் நிலையத்திலும், பண்ணைப் பகுதியிலும் இச்சம்பவங்கள் இடம்பெற்றன.**

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அதே நேரத்தில் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு, யாழ். பிரஜைகள் குழுவினர் யாழ் நகரில் வேறொரு இடத்தில் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தனர்.

### திடீரென வந்த குண்டு

சரியாக நேற்றுப் பிற்பகல் 3-30 மணிக்குக் கோட்டைப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக வெடிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அங்கிருந்து வந்த சன்னமொன்று பிரஜைகள் குழுவினர் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த சட்டடத்தில் வந்து விழுந்தது!

நகரில் திடீர்ப் பதற்றம் ஏற்பட, வழக்கம்போல மக்கள் சிதறி ஓட, வர்த்தக நிலையங்கள் அவசரம் அவசரமாக மூடியநிலையிலும், வாகனங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டும், வீதியை விட்டு விலகிக் குறுக்கு ஒழுங்கைகளாலும் சென்றுகொண்டிருந்தன. சில பஸ்கள் பிரயாணிகளுடன் இடம்மாறிச் சென்றுகொண்டிருந்தன நூற்றுக்கு மேற்பட்ட மக்கள், வயோதிபர் உட்பட வீதிகளில் ஓடிக்கொண்டிருந்தனர்.

### இளைஞர்கள் சூழ்ந்தனர்

இத்தசமயம் இளைஞர்கள் வான்களிலும், மினி ட்ராக்டர்களிலும் பஸ் நிலையத்தை வந்தடைந்தனர்.

வேம்படிச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி சத்திரத்துச் சந்திப் பகுதிகளில் ஏராளமான மக்கள் காணப்பட்டனர்.

### குண்டொன்று விழுந்தது

நான்கு மணியளவில் முனீஸ்வரன் வீதி ஊடாகவந்த குண்டொன்று யாழ். பஸ் நிலையப் பகுதியைச் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து பஸ்நிலையப் பகுதி, மின்சார நிலைய வீதிப் பகுதிகளில் தடைகள் வைத்துத் தடுக்கப்பட்டன. இதே போல் முன்னீஸ்வரன் வீதியில் எவரும் செல்லாமல் தடை போடப்பட்டது. முட்டாஸ் கடைச் சந்தியிலிருந்து சத்திரத்துச் சந்திவரையும் வீதியில் தடைகள் போடப்பட்டுத்தடுக்கப்பட்டன. பஸ் நிலையத்தில் மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

(5-ம் பககம பார்க்க)

## காயமடைந்தோர் பெயர் விபரங்கள்

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்தவர்கள்பின்வருமாறு(அடையாளம் காணப்பட்டவர்கள்)

தெய்வானை(50வயது)யாழ்ப்பாணம்,ரவீந்திரன் (22வயது) யாழ்ப்பாணம், சின்னராசா (32 வயது) ஓட்டுமடம், தங்கவேலு [21 வயது] யாழ்ப்பாணம், கோணமலை இணுவில், சர்வானந்தா [கோப்பாய் தெற்கு,ஜோன்சன் [19 வயது குருநகர், நகணநாதன் [20 வயது] அத்தியடி, புதிய வீதி, யாழ்ப்பாணம், சந்திரகுமார் (18 வயது) வண்ணார்பண்ணை, ராஜன் (25 வயது] யாழ்ப்பாணம, என். ராஜ்குமார் [28 வயது] சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம், ரூபாஸ் யாழ்ப்பாணம், பி நவமி ]16 வயது] முஸ்லிம் வீதி. யாழ்ப்பாணம், சந்திரன் யாழ்ப்பாணம், மன்

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 5 சடலங்கள்!

[யாழ்ப்பாணம்]

தீவுப் பகுதிக்குச் சென்றுவிட்டுக் காரில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது இருவர் பண்ணையில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்!

யாழ். சுங்கப் பகுதியைச் சேர்ந்த த. திலசேந்திரன், எஸ். தேவதாசன் ஆகியோரே பலியானவர்களாவர். இவர்களுடன் காரில்வந்த சுங்க

(5-ம் பக்கம் பார்க்க)

## 'கோட்டை' அழைப்பை ஏற்க மறுத்தனர்

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்குவந்து கண்காணிப்புக் குழுவினரை நேற்றுப் பிற்பகல் சந்திக்குமாறு பிரஜைகள் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டபோது அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்

யாழ். நகரில் வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு உறுப்பினர் ஒருவரின் இல்லத்தில் நேற்று வல்வெட்டித்துறை பருத்தித்துறை. யாழ்ப்பாணம் பிரஜைகள்குழு உறுப்பினர்

(5-ம் பக்கம் பார்க்க)

## மினிபஸ்ஸில் வந்த இளம் பெண் பலி!

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்று பண்ணையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதால் 17வயது இளம் பெண்ணொருவர் பலியானார்! மற்றொருவர் காயமடைந்தார்.

மினி பஸ்ஸில் வந்த இந்தப் பெண் மாதகலைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. மினி பஸ்ஸில் அச்சமயம் 15 பிரயாணிகள் இருந்ததாகவும், சூடு விழுந்ததும் மினி பஸ் நிற்காமல் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்பெண்ணின் சடலம் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

### நேற்றுமுன்தினம்சம்பவம்: மாண்டவர்தொகை: 5

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுமுன்தினம் நடந்த வானம், தரைத் தாக்குதலில் பலியானவர்களின் தொகை ஐந்தாக அதிகரித்துள்ளது.

காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில், 25ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த கொட்டடியைச் சேர்ந்த நடராசா ஞானம் நேற்று அதிகாலை 5மணிக்கு மரணமானார்.

## ஈழ விடுதலை படை திரட்ட லோக்தள் தலைவர் திட்டம்!

[சென்னை]

இலங்கையில் போராடும் தமிழ் ஈழப் போராளிகளுடன் இணைந்து போரிட்டு, தமிழ் ஈழம் அமைப்பதற்காக படை ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக இந்திய லோக்தள் கட்சியின் தலைவரும்,ஈழத் தமிழர் பாதுகாப்பு முன்னணியின் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே திரு. சுப்பிரமணிய சுவாமி இக்கருத்தை வெளியிட்டார்.

ஈழ விடுதலைக்காக அமைக்கப்படவுள்ள இந்தப்படைக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் முன்னாள் இராணுவ வீரர்களையும், தொண்டர்களையும் திரட்டத் திட்டமிட்டுள்ளதாகவும், இத்திட்டம் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி நடைமுறைப்படுத்தப்

(5-ம் பக்கம் பார்க்க)

## சடலங்களை உறவினர்கள் எடுத்துச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையிலிருந்த முஸ்லிம்பெண் சேயின்புவின் [50 வயது] சடலம் நேற்றுக்காலை மரணவிசாரணை நடைபெறுமுன்னர் உறவினர்களால் எடுத்துச்செல்

(5-ம் பக்கம் பார்க்க)

## பாரதீய ஜனதா கட்சிக்குழு இலங்கை வர முடிவு

(சென்னை)

இலங்கையில் நடந்து வரும் தமிழர்களின் போராட்டங்கள் பற்றியும், இலங்கைநிலைமைகுறித்தும் நேரில் கண்டறிவதற்காக இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதிநிதிகள்குழு ஒன்று விரைவில் இலங்கை

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் சைவ ஹோட்டலுக்கு தமிழ்நாட்டு முறைப்படி சைவ உணவும், சகல பலகார வகைகளும் தயாரிக்க அனுபவமுள்ள பண்பும், நல்லொழுக்கமும் உள்ள சமையற்காரர்கள் தேவை. ஆகக் குறைந்த மாதச் சம்பளம் 2500/-. பிராமணர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் திறமை வாய்ந்த ரீ மேக்கரும்தேவை. திறமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும். விளம்பரஇல: C 34, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-34)

நவாலி மானிப்பாயில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 'மகேஸ்வர இல்லம்' என்னும் அனாதைப் பிள்ளைகளின் இல்லத்துக்கு ஒரு மேற்பார்வையாளர் உடனடியாகத்தேவை. 45-50வயதுள்ள பெண்ணோ, ஆணோ விண்ணப்பிக்கலாம். இல்லத்தில் முழுநேரமும் வசித்து சேவை மனப்பான்மையுடன் பணியாற்றக்கூடியவர்களுக்கு இலவச உணவும், இருப்பிடவசதியும், நியாயமான ஊதியமும் அளிக்கப்படும். 14-1-86க்கு முன் சுய விபரங்களுடன் மேற்படி முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

C-44

## விற்பனைக்கு

மல்லாகம் சந்தியிலிருந்து காங்கேசன்துறை றோட்டில் சந்தியிலிருந்து 300 யார்தூரத்தில் வெற்றுக்காணி 25 பரப்பு விற்பனவுக்குள்ளது. தொழிற்சாலை அமைக்க உகந்த காணி. பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு ம. சிதம்பரநாதன், சட்டத்தரணி, தெல்லிப்பழையில் தொடர்பு கொள்ளவும். C 63

## வாடகைக்கு

இலக்கம் 174/1, கண்டிவீதி அரியாலையில் கச்சேரி பஸ் ஸ்ராண்டுக்கு அண்மையில் மின்சாரம், தண்ணீர்வசதியுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: க. பாலேந்திரன், 76/1, இலந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்திக்கு அருகாமையில், அரியாலை, யாழ்ப்பாணம். C21

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## படப்பிடிப்பாளர்கள் தேவை

பத்திரிகைத்துறையில், படப்பிடிப்பில் அனுபவமுள்ளவர்கள் பகுதி நேரமாக கடமையாற்றுவதற்குத் தேவை. அனுபவத்தைக் குறிக்கும்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
ஈழநாடு.

(A 29)

## நினைவு அஞ்சலி



ச. அன்ரனி பெனில் பெல்டானோ

தாழ்வுபாடு, மன்னார்.

பிறப்பு: 09- 04- 1962


இறப்பு: 06- 01- 1985

செ. மரியதல் மைடா தாசன் [ஜீவா]

பிறப்பு: 26- 01- 1958

இறப்பு: 06- 01- 1985

சாவட்கட்டு, மன்னார்.




ரூபன் குருஸ்

பிறப்பு: 14-03-1960 இறப்பு: 06-01-1985

[C 6] இங்ஙனம்: தோழர்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

கா. இராஜேந்திரா

[முன்னாள் பாலாவி உப்புக்கூட்டுத்தாபன பிராந்தியமுகாமையாளர்]

மறைவு:

6-01-1984

நித்திய ஜீவனையடைய வழிபடும்:


அன்பு மனைவி,
மக்கள், உறவினர்.

'திலகவாசா',
கொலிஜ்லேன்,
வட்டுக்கோட்டை.

[2610]

## முதலாவதாண்டு நினைவஞ்சலி

(திதி: 06-01-1986)



அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்

(நீண்டகால 'ஈழநாடு' சரவணை நிருபரும், புங்குடுதீவு-கண்ணகைபுரம் சைவ இளைஞர் சங்க முன்னாள் அமைப்பாளரும்)

மண்ணில் மலர்ந்த வண்ணம்:
13-11-1926
[சரவணை]

விண்ணில் விரைந்த வண்ணம்:
18-12-1985
[புங்குடுதீவு]

அன்பின், பண்பின் உறைவிடமான எம் அன்புத் தெய்வமே! தாங்கள் எம்மைவிட்டு அகன்றாலும்உங்கள்வற்றாத அன்பு, தளராத அணைப்பு, அகமும்,முகமும்மலர்ந்த வரவேற்பு எல்லாம் எங்கள் மனதில் பசுமையாகி, என்றும் எம் உள்ளத்தில் நின்று வழிகாட்டும். உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

கண்ணகைபுரம்,
புங்குடுதீவு-10.

(C-35)

## யாழ்ப்பாண அக்கடமி

**க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1986**

**துரிதமீட்டல் வகுப்புகள்**

86ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் 6-1-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[2465]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வளலாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லமுத்து வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } ரி.253

வேலுப்பிள்ளை செல்வநாயகம்
பிள்ளையார் கோவிலடி
வளலாய், அச்சுவேலி

எதிராக மனுதார்

1. வேலுப்பிள்ளை கைம்பெண் ஆச்சிமுத்து
2. வேலுப்பிள்ளை மகள் வசந்தநாயகி
3. வேலுப்பிள்ளை மகள் சுவந்தினி

எல்லோரும்பிள்ளையார் கோவிலடி வளலாய், அச்சுவேலி,

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 15-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 30-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு
மு. யோககுமார்
மனுதாரின் சட்டத்தரணி.
(C 11)

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

சுண்டிக் குளியைச் சேர்ந்த க. யோகராசா, யாழ்ப்பாணம் நீர்ப்பாசன அலுவலகத்திற்கு சிவில் பொறியியல் தொழில் நுட்ப உதவியாளராக இடம் மாற்றம் பெற்றுள்ளார். இவர் தமிழ், ஆங்கில கவிஞரும் எழுத்தாளருமாவார்.

## A/L 87

**தூய பிரயோககணிதம்**
**சனி, ஞாயிறு வகுப்பு**
**ஆரம்பம்: 11-1-86**

7-15 தொடர்பு வேகம்
8-30 நுண்கணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) (C 58)

## University of Jaffna, Sri Lanka

**Appointment of Consultants for Construction of Buildings**

The University of Jaffna wishes to appoint Consultants to prepare the plans, bills of quantiities and estimates for the construction of the following buildings.

(a) The proposed Faculty of Agriculture of the University of Jaffna at Kilinochchi.
(b) Ramanathan Academy of Fine Arts at Chunnakam.
(c) Sports Complex at Kokuvil.
(d) Natural Science Block - Stage 11.

Consultants who are interested in the above works are requested to send their applications and quotations to the Registrar, University of Jaffna, on or before 22nd January, 86.

Necessary information in these regard could be obtained from the Works Engineer of the University of Jaffna upto 15th January, 86.

REGISTRAR

University of Jaffna,
Sri Lanka
January 01-1986. A 20




## நன்றி

வியாபாரிமூலையிலுள்ள எமது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட மினிவானை மீட்பதற்குச் சகல வழிகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைப்புக்களுக்கும், வடமராட்சி மினிவான் சங்கத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. சிதம்பரநாதன்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

C51

## ரோம், வியன்னு தாக்குதலின் எதிரொலி:

# "லிபியா மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் இல்லை"

## இஸ்ரேல் அறிவிப்பு

உலகச் செய்திகள்

(டெல்அவிவ்)

**'லிபியாவுக்குப் பதிலடி கொடுக்கும் எண்ணம் தமக்கு இல்லை' என்று இஸ்ரேல் கூறியுள்ளது.**

ரோமாபுரி, வியன்னு ஆகிய விமான நிலையங்களில் சடந்த மாதத்தில் திடீர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டு பதினெட்டுப்பேர் பலியானது தெரிந்ததே.

இது சம்பந்தமாக இஸ்ரேல் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இதனைத்தெரிவித்துள்ளது

லிபியாமீது இஸ்ரேல் சுயேச்சையான இராணுவத் தாக்குதலை மேற்கொள்ளும் அல்லது அமெரிக்கா லிபிய மீது மேற்கொள்ளும் தாக்குதலில் இஸ்ரேலும் இணைந்துகொள்ளும் என்ற வதந்திகளிலும் எவ்வித உண்மையுமில்லை என்று கூறியுள்ள இஸ்ரேல் இது அமெரிக்காவிடமிருந்து வெளியாகியுள்ள அர்த்தமற்ற தகவலே'' என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை லிபியாமீது இத்தகையதொரு தாக்குதலை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டு வருவதாக சோவியத்யூனியனும், வேறுபல நாடுகளும் குற்றம் சாட்டியுள்ளன.

இது இவ்வாறிருக்க ரோமபுரி, வியன்னு விமான நிலைய சம்பவங்களில் தமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று லிபியா மீண்டும் மறுத்துள்ளதுடன், அமெரிக்கா அல்லது இஸ்ரேல் லிபியா மீது எந்த நேரமும் தாக்குதலை தொடுக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது. அவ்வாறு லிபியாமீது தாக்குதல் நடாத்தப்படும் பட்சத்தில் அதனை முறியடிக்கும் வகையில் லிபிய படைகள் யாவும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சிரியாவும், ஈரானும் லிபியாவுக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளதாகவும் கூறப்பட்டது (ரா)

---

### 'ஹேலிஸ்' வால்வெள்ளி ராஜீவ் பார்க்கிறார்!

(சென்னை)

எழுபதாண்டுக்கு ஒரு முறை வான்வெளியில் தோன்றும் ஹேலிஸ் வால்வெள்ளியை, நாளையதினம் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, பார்வையிடுவார்.

இதற்கான ஏற்பாடுகளை காவலூர் வான்வெளி ஆய்வுகூடம் செய்துள்ளது. இந்த வால்வெள்ளி பல அனர்த்தங்களை ஏற்படுத்தலாமென பலரும் அஞ்சுகின்றனர். (கெ)

---

## அடுத்த வாரத்தில் சோவியத் குழு ஈரான் செல்லும்!

[தெஹ்ரான்]

சோவியத் யூனியனின் உயர் அதிகாரிகள் குழுஒன்றுஅடுத்த வாரத்தில் ஈரான் செல்லவுள்ளது.

ஈரானுக்கும் சோவியத்யூனியனுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் பரஸ்பர அக்கறையுள்ள வேறுவிடயங்கள் பற்றி சோவியத் குழுவினர் ஈரானிய அதிகாரிகளுடன் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று கூறப்பட்டது.

கடந்தவருடம் செப்டெம்பர் மாதம் ஈரானியவர்த்தகக் குழு ஒன்று மாஸ்கோசென்று திரும்பியதின்பின்பு இருநாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் முதலாவது உயர் நிலை தொடர்பு இது என்று கூறப்படுகிறது. (ரா)

---

## புயல் அபாய எச்சரிக்கை கருவிகள்!

[புதுடில்லி]

புயல் அபாயம் பற்றி எச்சரிக்கை விடுக்கும் புயல் அபாய எச்சரிக்கைக் கருவிகள் ஆந்திரப் பிரதேசம் தமிழ்நாடு ஆகியவற்றின் கரையோரப் பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளன.

''டிஸாஸ்டர் வோனிங் சிஸ்டம்'' என்று அழைக்கப்படும் இந்தப் புதிய திட்டம் ஒரு உள்நாட்டுத் தயாரிப்பாகும்.

புயல் வீசக் கூடும் என்ற அபாயம் கிடைத்தவுடனேயே இக் கருவி குறிப்பிட்ட பகுதியினரையும், அம் மாவட்ட நிருவாகத்தினரையும் உஷார் படுத்து மென்றும்; இந்த எச்சரிக்கை ஒரு நாளில் எல்லா நேரங்களிலும் தொடர்ந்து மீண்டும்மீண்டும்விடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. [ரா]

---

## இருந்தும் இல்லாத நிலை

(உடுவில்)

உடுவிலில் அண்மையில் புதிய உப மின்சார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்த போதும் உடுவிலின் ஒரு பகுதி மக்களுக்கு மின் ஒளி குறைவாகவே கிடைக்கிறது.

கந்தரோடை உப மின்சார நிலையத்திலிருந்து மின்சாரம் பெற்று வந்த உடுவில் அம்பலவாணர் வீதிக்கான மின் இணைப்பு, புதிய மின் இணைப்பு நிலையத்திலிருந்து வழங்கப்பட்டபோதிலும் போதிய மின் ஒளியின்றி இப் பகுதி மக்கள் கஷ்ட முறுகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## கொலொம்பியாவில் மீண்டும் எரிமலை குமுறும் அபாயம்!

(கொலொம்பியா)

கொலொம்பியாவில் மீண்டும் எரிமலை வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பட்ட இடத்துக்கு அருகிலேயே இந்த அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனல் ஆர்னெர் பள்ளத்தாக்கு ஆற்றுப் படுகையில் வசிக்கும் மக்களை அங்கிருந்து குடிபெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கொலொம்பிய அரசு பணித்துள்ளது.

இந்த பிரதேசத்துக்கு அருகிலுள்ள நகர் மக்களையும் இடங்களைவிட்டு வெளியேறும்படி கொலொம்பிய அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்தநவம்பர்மாதம் இங்கு ஏற்பட்ட ஜெஞடாடென் லூட்ஸ் என்னும் எரிமலைத் தாக்கத்தால் சுமார் 23ஆயிரம் பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரா)

---

## அமெரிக்க - சோவியத் உயர்மட்டப் பேச்சுவார்த்தை

(வாஷிங்டன்)

அமெரிக்காவும், சோவியத் யூனியனும் அடுத்த மாதத்தில் உயர் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தவுள்ளன.

அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த வாஷிங்டன் வொய்ஸ்' என்னும் நாளேடு இதனைத்தெரிவித்துள்ளது.

இரசாயண, ஆயுத பரவல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இப்பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம்பெறும்.

கடந்தமாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற அதிபர் றீகன் தலைவர் கோபர்ச்சேவ் உச்சி மாநாட்டின்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. (ரா)

---

# "6,000 தமிழர் வன்முறையில் பலியாகியுள்ளனர்!"

## பாதிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் தகவல்

(ஐ. சண்முகலிங்கம்)

''இதுவரை நாட்டில் ஏற்பட்ட தமிழர்க்கெதிரான வன்முறைகளினல் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்துக்கு மதிகமாகும். இவர்களில் இரண்டாயிரம் பேர் குடும்பத் தலைவர்களாவர். திருகோணமலையில் அண்மையில் ஏற்பட்ட நிலைகளினல் இருபத்தையாயிரம்பேர்அகதிகளாகஉள்ளனர். இன்றும் ஆயிரக் கணக்கானவர்கள் காடுகளில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வாழ்கின்றனர்.''

இவ்வாறு பாதிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வு கழகத் தலைவர் திரு. கே. விசுவலிங்கம் அரியாலை மாதர் அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற, அகதிகள் புனர்வாழ்வு, சம்பந்தமாக ஆராயப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்

டாக்டர் எஸ் மோகனதாஸ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு கே. விசுவலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

''எமது புனர் வாழ்வுக்கழகம் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார் போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட ஐயாயிரத்து நூறு குடும்பங்களுக்கு வீடு, காணி வழங்கி குடியமர்த்தியுள்ளது. இவ்வாறு குடி அமர்த்தப்பட்ட அகதிகள் மீண்டும் அகதிகளாக விரட்டப்பட்டு இன்று ஓமந்தைக்கு வடபகுதியில் அகதிகளாக வாழ்கின்றனர். கிளிநொச்சியில் மட்டும் முந்நூறு குடும்பங்களைக் குடி அமர்த்தியுள்ளோம். இவர்கள் நிரந்தரமாக வசிப்பதற்குரிய வசதிகளுக்காக லட்சக் கணக்கான ரூபா செலவு செய்து வருகின்றோம்.

''அகதிகளாக உள்ள மக்களும், குடும்ப உறுப்பினர்களை இழந்த மக்களும் இன்று பிச்சைக்காரர்கள்போல வாழ்கின்றனர். உண்மையில் அநேக மக்களை வீதிகளில் பிச்சை எடுத்துச் சீவிக்கும் நிலையிலே காண முடிகிறது.

'' தமிழனுக்குப் பெரிய பண்பாடுகள் உண்டு. தனிப்பண்பாடுகள் உள்ளவன் தமிழன். தமிழைப் பேசுவதால் மட்டும் தமிழனுக வாழ்ந்துவிட முடியாது. சில தனவந்தர்கள் ஆயிரமாயிரம் ரூபாய்களை செலவு செய்து நல்ல நிலையில் வாழ்கின்றனர். ஆனல் அகதிகளுக்கு உதவி செய்யும்படி கேட்டால் அவர்கள் சொல்வது என்ன? தாமும் அகதிகள் போல வாழ்வதாகவே கூறுகின்றனர். இது எமது இனம் உய்ய வழி செய்யுமா?

'இன்றைய காலகட்டத்தில் இறந்தவர்கள், அனைவரும் எமது பிற்காலச் சந்ததியாவது உரிமையுடன் நன்ருக வாழ வேண்டும் என்பதற்காகவே தவது உயிரை அர்ப்பணித்துள்ளனர். எனவே

(6-ம் பக்கம் பார்க்க)

---

### தோட்டத் தொழிலாளர்கள்:

# "வேதனம் வெட்டப்பட்டால் மலையகம் தழுவிய வேலைநிறுத்தம்"

## மறுபரிசிலனை செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

''இனப் பிரசனைக்குத் தீர்வு வேண்டியும், நாட்டிற்கு அமைதி வேண்டியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தைப்பொங்கல் தினத்திலிருந்து மேற்கொள்ள இருக்கும் தியான, பிரார்த்தனைக் காலத்தில் தோட்டத்தொழிலாளர்களின் வேதனம் வெட்டப்படுமேயானல் முழு மலையகமுமே வேலைநிறுத்தத்தில் குதிக்கும்.'' இவ்வாறு இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் திட்டப்படி தோட்டத் தொழிலாளர்கள் காலை வேளைகளில் பிரார்த்தனையில் ஈடுபட்டுப் பின்னர் தோட்டவேலையில் ஈடுபடுவது என்று தீர்மானித்திருந்தார்கள்.

காலைவேளையிலேயே தேயிலை பறிக்கப்படுவதால் இ. தொ. காவின் தீர்மானம், உற்பத்தியை வீழ்ச்சியடையச் செய்யும் என்று கருதி; ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலைமையில் உயர்மட்டக் குழுவினர் கொழும்பில் ஆலோசனை ஒன்றை நடத்தினர்கள்

காலைவேளைகளில் தியானம், பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வேலைக்குப் பிந்திவரும் தொழிலாளர்கள் பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் வேலைக்குத் திரும்பினல் வர்களுக்குஅரை நாள் வேதனம் வெட்டப்பட்டு மிகுதி அரை நாள் வேதனம் வழங்குவது என்றும், குறைந்தது நான்கு மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை ஒரு மணிக்குப் பிந்தி வருபவர்களுக்கு முழுச் சம்பளமும் வெட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

அரசின் இந்த முடிவு குறித்துத் திரு செல்லச்சாமி கருத்து வெளியிடுகையில் அரசின் இவ்வாருன செயல்கள் மலையகம் தழுவிய வேலை நிறுத்தத்திற்கே வழிவகுக்கும் என்று தெரிவித்ததுடன் எமது திட்டம் தேட்டத்துறையில் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் என்றும் அரசின் முடிவை ஜனதிபதி மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (பி)

## மணிவாக்கு

நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் —குறள்
[சிரிக்கும் ஆற்றல் அற்றவர்களுக்கு, இன்பமயமாகக் காணப்படும், இந்தப் பெரிய உலகம் துன்பமாகக் காட்சியளிக்கும்]

# நமது நோக்கு

## இரத்தமே இன்றைய தேவை

இரத்தக்களரி முடிவடையும் சாத்தியமில்லை என்பது அமைதியை வேண்டிநிற்கும் மக்களுக்கு புதுவருடத்தில் உண்டாகும் வேதனை.

யாழ். நகரில் கண்காணிப்புக்குழு வரும்போதெல்லாம் ராணுவக் குடைபிடிக்க வேண்டிய அவசியம் இன்று என்ன அனர்த்தங்களை விளைவிக்கின்றது?

யாழ்ப்பாணத்தில் முந்தநாள் நடந்த வான்-தரைத் தாக்குதலில் நான்குபேர் கொல்லப்பட்டதும் 21பேர் காயமடைந்ததும் அரசால் எதிர்பார்க்கப்படாத கொடுமையா?

இதற்குமுன் நடைபெற்ற கண்காணிப்புக்குழுவின் யாழ்.விஜயம் எவ்வாறிருந்ததுஎன்பதை அரசு நன்கறியும்.

எனவே அதற்கொரு மறுத்தான் போல ஆயத்தமான தாக்குதல் இது வென்றுகொள்வதில் என்ன தடை?

யாழ்ப்பாணத்தை ஜனாதிபதிஜெயவர்த்தனா நேரிலே பார்வையிட வேண்டுமென்றுஒரு பத்திரிகைநிருபர் கேட்டபோது,கசப்பான ஹாஸ்யத்தில் ஜனாதிபதி அளித்தபதில் இன்று மெய்த்திருக்கிறது.

குண்டால் தாக்கப்படாத கண்ணாடிப் பெட்டியில் அடைத்த வண்ணமே இன்றைய யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்யவேண்டும். எனவே நானோ எனது அமைச்சரோ அங்கு இன்று செல்லமுடியாத நிலை உண்டென்றார்.

கண்காணிப்புக்குழு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவது அபாயமென்பதால், இலங்கை ராணுவம் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கிறது.

அப்படி இருந்தும் விசாரணை நடத்த இயலாத நிலைமையை தீவிரவாதிகள் ஏற்படுத்திவிட்டனர் என்று அரச அறிக்கை குறிப்பிடுவது எதனைக் குறிக்கிறது?

எதிர்க்கட்சித் தலைவர் விடும் சவாலை உறுதிப்படுத்தும் வகையில் அரச நிர்வாகம்யாழ்ப்பாணத்தில் அற்றுப் போய்விட்டதை நிரூபிக்கிறது. ராணுவ பாதுகாப்பு கண்காணிப்புக்குழுவிற்(கு) எவ்வகையிலும் அவசியமென்பதால் பலாலியில் வந்திறங்கிய குழு வெளியேறமுடியாது திண்டாடியதாகச் செய்திகுறிக்கிறது. அவர்களுக்குக் கண்ணிவெடி தடை[.]

யாழ். நகர் வாசிகளுக்கு வானிலிருந்து ஹெலிகொப்டர்தாக்குதல், யாழ்.கோட்டையிலிருந்து ராணுவத்தினரின் தரைத் தாக்குதல்.

இந்த அபாய நிலையில் அகப்பட்டவரே கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் சிவத்தம்பி; கொழும்புசெல்ல முடியாத பக்குவத்தில் அங்கிருந்து வரும் குழுவினருடன் யாழ்ப்பாணத்தில் சேரலாமென்ற நம்பிக்கையில் யாழ்.நகர் வந்த பேராசிரியர் மயிரிழையில் உயிர்தப்பினரென்றால் கண்காணிப்புக்குழு தயக்கமின்றி யாழ். வந்த போதும் ஒரு பேராபத்திலிருந்து தப்பி இருக்கிறது.

யாழ் ‘பயங்காரவாதிகள்’ குழுவினரைத் தரம்பிரித்து கொல்ல எத்தனிக்கின்றனரா? அரசராணுவ ஹெலிகொப்டர்போர்இனங்கண்டு தாக்குதல்நடத்துகிறதா?

யாழ்ப்பாணத்தில் இவ்வித கொடுமைக்கு நீண்டகாலமாக இடமிருந்து வருவதை ஒரு சவாலாக எடுக்கும் அரசு, பொர்பன்சைப் போல் (Bourbons) ஒன்றையும் படிப்பதில்லை ஒன்றையும் மறப்பதில்லை என்றே சொல்லவேண்டும்.

கண்காணிப்புக்குழு அங்கத்தவர் தமிழ்ப்பெருமகன் என்ற ரீதியில் நிலைமையைத் தெளிவுபடுத்திக் கொடுமைக்குத் தெரிவித்த ஆட்சேபத்திற்கு அரசுஎன்னவிடை அளிக்கப்போகிறது?

பொதுமக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில், நகரம் காலத்துக்குக்காலம் அல்லோலகல்லோலப்படுவதும் மக்கள் கொல்லப்படுவதும் காயப்படுவதும் அரசுக்கு வெற்றியளிக்குமா? யாழ்ப்பாணத்திலிருந்து ‘பயங்கரவாதம்’ நீங்க உதவுமா?

தமிழ்மக்கள் எல்லோரும் கொல்லப்படுவது அரசின் திட்டமல்ல என்று ஜனாதிபதி குறிப்பிட்டது நினைவுக்குவருகிறது. இந்தத் தீர்மானம்தானோ பேராசிரியரின் உயிர் தப்பியதின் இரகசியம்? நாம் அறியோம்.

இரத்தம் சிந்துவது தமிழ் மக்களின் இன்றைய தலைவிதி அது ஒருபுறமிருக்க உயிர்தப்ப வைக்க யாழ். ஆஸ்பத்திரியில் தேவைப்படும் இரத்தம் வழங்க அனைவரும் முந்துங்கள்.

விமானப்போரும் கோட்டை இடியும் எங்கும் என்றும் நிலைத்ததில்லை; இருப்பினும் இந்த நாடகத்தை இனியாவது நிறுத்துங்கள் என்று வற்புறுத்துவது எமது கடமை.

### பாடசாலை நலன் கருதி மாதாந்த அன்பளிப்பு

(பூநகரி)

முழங்காவில் அரசினர் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினரும், இளைப்பாறிய யாழ். பொலிஸ் அதிகாரியுமான திரு. ரி. தாமோதரம்பிள்ளை பாடசாலையின் துரித வளர்ச்சி கண்டு அங்கு கடமையாற்றும் அதிபரையும் ஆசிரியரையும் பாராட்டியதோடு பாடசாலையின் முன்னேற்றம் கருதி தமது ஓய்வூதியத்தில் இருந்து மாதாமாதம் நூறு ரூபா அன்பளிப்புச் செய்து வருகிறார்.

இவருடைய அன்பளிப்பை பாடசாலை அபிவிருத்திச்சபை பெற்று பாடசாலை அபிவிருத்திக்காக செலவிட்டு வருகின்றது.

## இந்திய, ஆபிரிக்க அரசியல் — அரசியல் அவதானி

# இந்திய தேசிய காங்கிரஸ்(INC) நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் துடுக்கு அடக்கப்பட்டதா?

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) திண்டாட்டம் தோல்வி காணுமா?

### இந்தியா

**1885** டிசம்பர் 28ல் பிரபல பாரிஸ்டர் டபிள்யூ சி. பனர்ஜியின் தலைமையில் பம்பாய் நகரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆரம்பமானது. இந்த இயக்கத்துக்கு வித்திட்டவர், அதன் ‘தந்தை’ என்ற பெயருக்கு உரித்தானவர் அலன் ஒக்டேவியன் ஹியூம் (Hume) என்ற பிரிட்டிஷ் பெரியார் என்பது இன்று பலருக்குத்தெரியாது. சுயாட்சி இயக்கத்தை தீவிரப்படுத்திய காங்கிரஸ் தலைவர் (1917) இன்னொரு பிரபல ஆங்கிலயாது அன்னிபெசன்ட் அம்மையார் என்பது பலருக்குத் தெரியும். சென்னையில் சிலநிறுவனங்கள் அவருடைய பெயரில் உண்டு.

எனவே ஆங்கில அரசியல் தீவிரவாத இயக்கம் ஒன்று இந்தியாவின் அடிமைத்தனத்தை ஒழிக்க பிரிட்டிஷ் ஆட்சிக்கு சவால்விடும் பணியில் இந்திய காங்கிரஸ் விவகாரங்களில் பெரும் பங்குகொண்டிருந்தது. ஆங்கில அறிஞர் ஷா, தத்துவமேதை ராசல்பிரபு போன்றோர் இங்கிலாந்திலேயே இந்தியா சுதந்திரம் பெறும்வரைக்கும் நன்றாய் உழைத்தனர்.

### காந்திக்குமுன்

தம்முடைய அரசியல் குரு என்று காந்தி குறிப்பிடும் கோபாலகிருஷ்ணகோகலே, பிரிட்டிசாரைபோரில்எதிர்த்த லாலா லஜபதிராய், பாலகங்காதரதிலகர்- ’சுதந்திரம் எமது பிறப்புரிமை’ என்று குரல் எழுப்பியவர்- போன்ற பெருந்தலைவர்கள் இந்தியதேசியத்தை வளர்த்துவந்தவர்கள்.

### காந்தியுகம்

தென் ஆபிரிக்காவில் தமது ஆன்மீகபலத்தை பரீட்சித்து சித்திபெற்ற காந்தி 1919ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைமை பெற்றார். 1947ல் இந்தியா சுதந்திரம் பெறும்வரை அத்தலைமைத்துவம் நிரந்தரமாக விருந்தது.

தேசபிதா என்று போற்றப்படும் மகாத்மா காந்தியின் தலைமைக்கு பலமளித்த பெருந்தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தேசத்தை ஆளும் திறமையும் தியாகமும் நிறைந்த பெரியோர்.

ஒத்துழையாமை சட்ட மறுப்பு, லண்டன் வட்ட மேசை, உப்புச்சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற அஹிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கையில்லாத சுபாஸ் சந்திரபோஸ் இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் காந்தியுடன் பிணக்குற்று. காங்கிரஸை மட்டுமல்ல இந்தியாவைவிட்டு வெளியேறினார்.

எனவே பூரணசுதந்திரத்துக்கு உழைத்த பெருந்தலைவர்களில் நேருவே தம்முடைய அரசியல் வாரிசு என்றும் பட்டேல், ராஜன்பாபு, ராஜாஜி, அஸாட், சரோஜினி. எல்லைப் புறகாந்தி கபார்கான், ஆசாரிய கிருபாளினி போன்ற பல பெருந் தலைவர்களின் ஒத்துழைப்புடன் சுதந்திரம் காணும் பேறுபெற்றார்.

### நேருசகாப்தம்

சுதந்திரத்துக்குப்பின், ஐஎன்சி கலைக்கப்பட்டு ஒரு தேசிய சர்வோதய இயக்கம் உருவாக்கவேண்டுமென்று காந்தி கருதியபோதும் சுதந்திர இந்தியாவின் ஆட்சிபலம் பெறவேறுகட்சிஉருவாக்குவது சாத்தியமல்ல என்பதால்; நேருவின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. நேருசகாப்தம் தளப்பமின்றி 1964வரைக்கும் நிலைத்தது. சுதந்திர இந்தியாவிற்கு அனைத்துலகிலும் மதிப்பு அதிகரித்தது.

### இந்திரா ஆட்சி

நேருவுக்குப்பின்வந்த சாஸ்திரியின் இருவட ஆட்சி முடிவடைய இந்திரா பிரதமரானதும் சர்ச்சை ஏற்பட்டது. மக்கள் ஆதரவைப் பெருமளவில் பெற்ற இந்திரா; இந்திய தேசிய காங்கிரஸை இரண்டாய், மூன்றாய்ப் பிளந்து ஈற்றில் காங்கிரஸ் (1)- இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் மறைந்தார்.

இந்திராவென்றால் இந்தியா வென்ற குரல்மங்கிவந்ததும் ராஜீவ் பிரதமரான வரலாறும் அவருடைய ஓராண்டு ஆட்சியின் பெருமையும் வருங்கால வரலாற்றுக்குரியன.

உலகின் பெருந்தலைவர் மட்டுமல்ல; தகப்பனைப்போல் தனித்துவ ஆளுமை பெற்ற இந்திரா சுமார் 16 வருடம் நாட்டைப் பரிபாலித்த திறமை ஒரு புறம்; குதிரை போலிருந்த காங்கிரஸைக் கட்டெறும்பாக்கிவிட்டாரென்ற கண்டனம் மறுபுறம்.

### நூற்றாண்டுக் கொண்டாட்டம்

நேருவின் பேரனும், மகாத்மாவின் நாமமும் படைத்த இன்றைய பிரதமர் ராஜீவின் பேரதிர்ஷ்டமே; இந்த நூற்றாண்டு விழாக்கொண்டாட்டம். அதற்கு அழைக்கப்பட்ட 2000 பிறநாட்டு விருந்தினர், அதனைக் கண்டு களிக்க வந்த சுமார் லட்சம் மக்கள் பம்பாய் நகரத்துக்குத் தனிச் சிறப்பை அளித்தனர்.

97 வயதுடைய ‘எல்லைக் காந்தி’ தம்முடைய மகனுடனும், பேரனுடனும் பாகிஸ்தானில் இருந்து வந்த காட்சி மிகவும் சோகமானது. இருப்பினும் இந்த நூற்றாண்டு விழா இன்றைய இந்திரா காங்கிரஸுக்கு உரித்தானதா என்ற கேள்வியும் கண்டனமும் எழுந்திருக்கிறது. காங்கிரஸ்என்றால்காந்தி, நேரு இந்திரா, ராஜீவ் என்ற கொள்கை மாற வேண்டும் என்ற கருத்து வலுப்பெறுகின்றது.

**இந்திய தேசிய காங்கிரஸ் (INC)கொண்டாட்டம்ஆசியாவின் ஒருமுக்கிய வைபவம். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) படும் திண்டாட்டம் எத்தகையது?**

‘இன ஒதுக்கல்’ என்ற தீண்டாமை நோய் தென்ஆபிரிக்காவில் வளர்ந்து வருகின்றது. ஜெனரல் போதாவின் இனவெறி ஆட்சி வரலாற்றின் முரண்பாடே என்று குறிப்பிட இடமுண்டு. மஹாத்மா காந்தியின் சத்திய சோதனை தென் ஆபிரிக்காவிலேயே ஆரம்பமாகி வெற்றியும் கண்டது. இன்று அதே தேசத்தில் தீண்டாமை என்ற இனவெறி ஆட்சி தலை விரித்தாடுகின்றது.

### மன்டெலா

பிறெற்றோறியாவில் நடைபெறும் அக்கிரமங்கள் இன்று ‘இன ஒழிப்பு’ என்று கொள்ளுமளவிற்கு உக்கிரம் பெற்றிருக்கின்றது. 1960 ல் நடைபெற்ற கொடுமைகள் கடந்த சில வருடங்களில் மறுதலித்திருக்கின்றன. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் மன்டெலா 24 வருட சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஆட்சிக்கு எதிரான பெரும் எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்தியுள்ளது.

இதற்குத் தலைமை தாங்குபவர் திருமதி வின்னி மன்டெலா; அரசு விடுத்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் மீறிய வீரப் பெண் மணி இருவாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்டார். அனைத்துலகக் கண்டனத்தையும் கறுப்பரின் தீவிரப் போரையும் சமாளிக்கும் வகையில் திருமதி மன்டெலா விடுதலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து போராட்டம் வீறுபெற்றிருக்கிறது.

மகாத்மாவின் அஹிம்சைக்கு முற்றிலும் மாறுபட்ட போராட்டம் இது. அரசின் ராணுவத்தை முறியடிக்க கறுப்பர், கல்லையும், கற்பாறையையும், பொல்லையும், கத்தியையும் தங்கு தடையின்றி உபயோகிக்கின்றனர்.

கறுப்பர் சாகத் தயாரென்பதால், வெள்ளையர் கொல்லப்படுவதும் சாதாரணம். முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்ற திடமான கொள்கைக்கு திருமதி மன்டெலா உரமளித்திருக்கிறார்.

### பக்கபலம்

ANC என்ற ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தனித்து நிற்கவில்லை. தென் ஆபிரிக்காவின் 34 பல்லினப்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்த சமஷ்டி அமைப்பு [COSATU]; (1)மன்டெலாவின்உடனடிவிடுதலை [2] கறுப்பர் நகரங்களிலிருந்து ராணுவவெளியேற்றம் (3)அவசரகாலச்சட்டம் வாபஸ்என்ற கோரிக்கைகளை முன் வைத்து கடும் போர் தொடங்கியிருக்கிறார்கள். வெளிநாடுகளில் இந்தக் கொடுமைகளை நீக்க வேண்டுமென்று ஆட்சேபம் தெரிவிக்கும் வேளையில் ஜெனரல் போதாவின் ‘நண்பர்கள்’ வளாவிருக்கவேண்டிய நிலை கட்டாயமாகிறது.

### எல்லையில் தடை உத்தரவு

[கேப்டவுன்]

லெசத்தோவுடனான எல்லையை கடந்து தமது பிரதேசத்துக்குள் மக்கள் பிரவேசிப்பதை தென்னாபிரிக்க அரசு தடை விதித்துள்ளது.

ஆபிரிக்க தேசியவாதப் போராட்டக்காரர்கள் லெசத்தோப்பில் ஒன்று திரண்டிருப்பதாக கூறியே தென்னாபிரிக்க அரசு இந்தத் தடையை விதித்துள்ளது. (ரா)

### இவர்களுக்கு பழைய மாணவர் புலமைப்பரிசில்

[மானிப்பாய்]

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 7-ம் ஆண்டு அனுமதிக்கான பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்கள் புலமைப் பரிசில் பெறவிருக்கின்றார்கள்.

சி. கஜன், அ. ஜெகதீசன், சி. சண்முகதாஸ், க.பிரதீபா, ற. கிஷோர் ஜகான் ஆகிய ஐவருமே இவ்வித பரிசில்களை பெறவிருப்பவர்களாவர்.

பழைய மாணவர்கள் மூவர் இந்தப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் வருட படிப்புச் செலவுக்கென தலா ரூ 500 வழங்கப்படவுள்ளது.

# யாழ். நகரில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐந்து மணியளவில், ஹெலிக்கொப்டர் ஒன்று நகரைச் சுற்றி மிக உயரத்தில், வட்டமிட்டுக் கொண்டிருந்தது. வானத்தில் ஹெலிக்கொப்டர் சத்தத்தைக் கேட்டதும், வீதியிலும், வீட்டு வாசலிலும் நின்ற மக்கள், பாதுகாப்புத் தேடி வீடுகளுக்குள்ளும், மரங்களுக்குக் கீழும் மறைந்திருந்தார்கள். வானத்திலிருந்தும் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

5.30 மணியளவில், பஸ் நிலையத்தில் பாரிய குண்டொன்று விழுந்து பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியதால், பஸ் நிலையத்தில் நின்றவர்கள் 'ஐயோ' என்று அழுது கதறியபடி துடிதுடித்து விழுந்தார்கள், காயப்படாதவர்கள் அவர்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

மினிவான் ஒன்றில் பதினாறு பேர் தனியார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து 32 பேர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்த சிலர் சயிக்கிளிலும் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

### பஸ் நிலையம் ஒரே இரத்தமயம்

எங்கு பார்த்தாலும் மக்கள் இரத்தம் வழிந்தோடும் நிலையில் விழுந்து கிடந்தனர். சிலர் மயங்கிவிட்டனர் யாழ் பஸ் நிலையம், ஒரு யுத்த களம் போல் காணப்பட்டது.

ஒரு பக்கம் குண்டு வெடிச் சத்தங்களும், மறுபுறம் தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருக்க, காயமடைந்தவர்களை பலர் ஆஸ்பத்திரிக்கு பின் வாசல் வழியாகத் தூக்கிச் சென்றனர்.

### 25 ம் வார்ட் நிரம்பி வழிந்தது

25 ம் வார்ட்டிற்கு ஒன்றின் பின் ஒன்றாக 28 பேர் கொண்டுவரப்பட்டனர். தொடர்ந்து காயமடைந்தவர்களைக் கொண்டுவந்தனர். அந்த வாட் நிரம்பி வழிந்தது வார்ட்டைச் சுற்றி வெளியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நின்றனர். டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் அங்கும் இங்குமாக ஓடியோடி அவசர சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

### பெண்கள் வார்ட்டிலும் ஆண்கள் அனுமதி

25-ம் வார்ட்டில் கட்டில்கள் யாவும் காயக்காரரினால் நிரம்பி விட்டதால், பெண்கள் வார்ட்டான 9-ம் வார்ட்டுக்குள் காயமடைந்த ஆண்களையும், சிறுவர்களையும் கொண்டுசென்றனர். 9-ம் வார்ட்டில் கட்டிலில் நடக்கமுடியாமல் படுத்திருந்த தாய்மார்களும், தங்கள் கட்டிலிலிருந்து இறங்கி, காயமடைந்தவர்களுக்கு இடமளித்து வெறும் நிலத்தில் படுத்த காட்சி நெஞ்சைஉருக்குவதாக இருந்தது. 9-ம்வார்ட்டில் 16 சட்டில்களை பெண் நோயாளர்கள் காயமடைந்தவர்களுக்கு விட்டுக்கொடுத்தனர். இங்கும் டாக்டர்களும், தாதிமார்களும், ஊழியர்களும் சுறுசுறுப்பாக இயங்கிச் சிகிச்சையளித்தனர்.

### தனியார் வைத்தியசாலையிலும்

ஆறு மணியளவில் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட, காயமடைந்தவர்களில் 11 பேர் மினி பஸ் ஒன்றில் கொண்டுவரப்பட்டனர். இவர்களில் 3 பேர் 25ம் வார்ட்டுக்கும், 8 பேர் 9ம் வார்ட்டுக்கும் கொண்டுவரப்பட்டனர். காயக்காரர் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்க, பெண் நோயாளிகள் தங்கள் கட்டில்களை விட்டு இறங்கி இடமளித்தபடியிருந்தனர்.

இரவு 7 மணியளவில் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டஒருவர் மயக்கமடைந்த நிலையில் கார் ஒன்றில் கொண்டுவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி 25ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார்.

25ம் வார்ட் முன்விருந்தையில் ஒரு கட்டிலில் ஒருவரின் சடலம் காணப்பட்டது. இவர் இரவு பகலாக பஸ்நிலையத்தில் காணப்படுபவர். உடலில் பல இடங்களில் சிறுசிறு காயங்கள் காணப்பட்டன. வாய், மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தபடியிருந்தது.

பின் விருந்தையில் மற்றொரு இளைஞரின் சடலம் காணப்பட்டது. இவரது கையில் சூட்டுக் காயமிருந்தது. இவ்விரு சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை.

பஸ் நிலையத்தில் காயமடைந்த ஒரு சிறுவனை இருவர் கஸ்தூரியார் வீதி வழியாகத் தூக்கிவந்தபோது, அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வாகனம் இல்லாததினால் சாரதியின்றி அவ்வீதியில் நின்ற 'ஓட்டோ றிக்சோ'வில் அச்சிறுவனைச் சிலர் ஏற்றிச் சென்றனர்.

### பஸ் நிலையம் இடம் மாறியது

பஸ் நிலையத்தில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் போல் பஸ் நிலையம் தற்காலிகமாகநேற்றும் ஆரியகுளம் சந்திக்குஇடம் மாறியது. வ.பி.போ.ச. பஸ்கள், மினிபஸ்கள் ஆரியகுளம் சந்தியில் நிற்பாட்டி வைக்கப்பட்டிருந்தன. பிரயாணிகள் அங்கு சென்று பஸ் எடுத்தனர். பலர் போக்குவரத்து வசதிகளின்றி யாழ். நகரில் நண்பர்கள் உறவினர்கள் இல்லங்களில் தங்கினர்.

ஆஸ்பத்திரியில் இரத்த வங்கியில் இரத்தம் முடிந்துவிட்டதால் அங்கு திரண்டு நின்ற மக்களிடம் இரத்தம் வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டபோது 29 இளைஞர்கள் இரத்தம் வழங்க முன்வந்து வங்கி நோக்கிச் சென்றனர். [சு]


## தேவை

மொணிற்றேர்ஸ் கொப்பிகள் கட்டுவதற்கு முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் உடன் தேவை. தொடர்பு: (1)029/3 மதவடி லேன், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (C 66)

## விற்பனைக்கு

கச்சேரிக்கருகில் 1½ பரப்பும், நாவற்குளி-கேரதீவு றோட்டில் 3 பரப்பும், மறவன்புலத்தில் 65 பரப்பும் விற்பனைக்குண்டு. தி. புருஷோத்தமன், சட்டத்தரணி, 465/16, பருத்தித்துறை வீதி, நல்லூர்க் கோவிலருகில். (C 65)

**எம்பயர்**

7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
ரேவதி - முரளி
**பகல்நிலவு**

**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30
FIVE DAYS
CNE SUMMER
(Colour)
யாழ் நகரில் முதல் தடவையாக காண்பிக்கப்படுகிறது.

ஜனவரி 7 மட்டும்
**வெலிங்டன்**

10-30, 2-30, 4-30 6-30
பயங்கர கராட்டி குஞ்பூ சண்டைக் காட்சிகள் நிறைந்த கொழும்பில் பல மாதங்கள் ஓடிய
TEN BROTHERS OF SHALOIN
[யாழ். நகரில் முதன்முதலாக காண்பிக்கப்படுகிறது]


## ஈழ விடுதலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படும் என்றும் கூறினர்.

குறிப்பிட்ட ஒரு கால இடைவெளிக்குள் தமிழர்களுக்கு சகல உரிமைகளும் கொண்ட கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்துமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனவை பிரதமர் ராஜீவ் காந்தி நிர்ப்பந்திக்கவேண்டும் என்றும், அல்லது தமிழீழத்தை அமைக்க இந்தியா தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தாம் பிரதமர் ராஜீவ் காந்தியை வலியுறுத்தப்போவதாகவும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறினர். [ரா]

## சுங்க அதிகாரி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவல்துறைக்கு கடமைக்குச் சென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிவரும் வழியில் அவர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்கானர். இவருக்கு தலையில் காயம் காணப்பட்டது.

## கோட்டையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சுமார் 10மணி நேரம் காத்திருந்துவிட்டுநேற்றுமாலை வீடுதிரும்பினர்கள்.

கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் இவர்களுடன் தங்கியிருந்தார்.

பலாலியிலிருந்து நேற்று நண்பகல் கண்காணிப்புக்குழுவினர் கோட்டைக்கு வந்ததாகவும். அங்குவந்து சந்திக்குமாறு பேராசிரியர் சிவத்தம்பி மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், அதனை தாங்கள் மறுத்துவிட்டதாகவும், வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு இணைச் செயலாளர் திரு. குமாரசாமி தெரிவித்தார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பிற்பகல் கோட்டைக்குச் சென்று கண்காணிப்புக்குழுவினரை சந்தித்து தங்கள்முடிவைத்தெரிவித்ததாகவும் அவர் கூறினர்.

வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு சார்பில் இணைச் செயலாளர்கள் திரு, எஸ். குமாரசாமி திரு. ஆடியபாதம், பொருளாளர் திரு முருகமூர்த்தி, திரு. அரசரத்தினம், ஆகியோர்வந்திருந்தனர்யாழ். பிரஜைகள்குழு சார்பில் டாக்டர் சிவாபசுபதி, திரு. என். கந்தசாமி, திரு. விசுவலிங்கம் திரு. அருமைநாயகம் ஆகியோர் வந்திருந்தனர்.

## யாழ் ஆஸ்பத்திரி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலெக்டர் திரு. கணேஷ் படுபடுகாயமடைந்தார்.

பலியான இருவரின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. திலகேந்திரனின் வலது கையில் பலத்த காயம் காணப்பட்டது.

மடத்துவெளியைச் சேர்ந்த 30 வயதான ஒரு பெண்ணின் சடலமும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவர் பாவாடை சட்டை அணிந்திருந்தார்.

பஸ்நிலையத்தில் பலியானவர் தொழிலாளி அன்னலிங்கம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரின் சடலமும் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்படாத மற்றொரு சடலமும் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவருக்கு வலது இடுப்பில் காயம். சிவந்த மேனி. இளம் வயதானவர்.

ஆஸ்பத்திரி பின்பக்க வாசல் இரவு முழுவதும் திறந்திருந்தது நள்ளிரவு 12 மணிக்குப் பின்னரும் சடலங்களையும், காயமடைந்தவர்களைம் அடையாளம் காண மக்கள் வந்துகொண்டிருந்தனர். ஆஸ்பத்திரியில் ஒரே அழுகைக் குரல் கேட்டது!

தீவுப்பகுதியிலிருந்து லொறியில் வந்த சு. செல்வரத்தினம் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து9ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடன் வந்த கிளீனருக்குக் காயம் ஏற்படவில்லை. [சு]

# பிறப்பு, இறப்பு அத்தாட்சி பத்திர விநியோகம் துரிதம்

[யாழ்ப்பாணம்]

பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கு டிசம்பர் 31ம் தேதிவரை விண்ணப்பம்செய்தவர்களுக்கு இதுவரை அனுப்பி வைக்கப்படாத பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று யாழ். மேலதிக பதிவாளர் திரு எல். இராசையா தெரிவித்தார்.

திரு. இராசையா மேலும் தெரிவிக்கையில், அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பி வைப்பதில் எவ்வித தாமதமும் இல்லையென்றும், கடந்த வருட விண்ணப்பங்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவென்றும் கூறினர்.

மீண்டும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும், ஒரே நாளில் சுமார் 400 விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் கூறினர்.

விண்ணப்பங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் 3 நாட்களுச்குள் அனுப்பிவைக்கப்படுவதாகவும், ஊழியர்கள் வேலை நாட்களில் மேலதிக நேரமும், விடுமுறை தினங்களிலும் மக்களுக்காகச் சேவைசெய்து வருவதாகவும் கூறினர்.

காலம் கடந்த பதிவு, பெயர் மாற்றம் தொடர்பான சுமார் 300 விசாரணைகள் நடைபெற வேண்டியிருப்பதாகவும். தினமும் நான்கு விசாரணைகள் மட்டுமே நடைபெறுவதாகவும், இந்தத் தாமதத்தைத் தவிர அத்தாட்சிப்பத்திரம் அனுப்புவதில் வேறு எவ்வித தாமதமும் இல்லையென்றும் கூறினர்.

## சடலங்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டது.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசாவின் உத்தரவைத்தொடர்ந்து யாழ் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் நேற்றுக்காலை மரணவிசாரணையை ஆரம்பித்தார் பொலிசாருடன் அவர் சடலத்தை பார்வையிடச் சென்றபோது பிரேத அறையில் அப்பெண்ணின் சடலம் இருக்கவில்லை. உறவினர்கள் எடுத்து சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொட்டடியைச்சேர்ந்த நடராசா ஞானம் [26வயது] என்பவரின் மரணவிசாரணையை ஆரம்பித்த மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் அச்சடலத்தையும் பார்வையிடபிரேத அறைக்குச் சென்றபோது சடலம் இருக்கவில்லை. அச்சடலமும் உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த வேலணையைச் சேர்ந்த ஒருவரின் சடலமும், குருநகரைச்சேர்ந்த இ. வெளிக்கிளாசின் சடலமும் நேற்று முன்தினம் உறவினர்களால் எடுத்துச்செல்லப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மினிபஸ்ஸில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

### இளைஞர் பலி!

வண்ணார்பண்ணை பி.ஏ. தம்பி ஒழுங்கையைச்சேர்ந்த பாலேந்திரா (வயது 25) எனும் இளைஞரும் பலியானர்.

பஸ் நிலையத்தில் இவர் நின்றுகொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானர். [சு]

## பாரதீய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**வரவுள்ளது. இக்குழுவிற்கு கட்சியின் தலைவர் திரு. ஏ. ஜே வாஜ்பாய் தலைமைவகிப்பார் என்று கூறப்பட்டது.**

பாரதீய ஜனதாக்கட்சியின் தேசிய செயற்குழுவின் மூன்று நாள் கூட்டம் சண்டிகாரில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் கடைசிநாளான நேற்று மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கைவரும் இக்குழு ஈழ விடுதலைப் போராட்டத் தலைவர்களுடனும், இலங்கை அரசுடனும் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்துமென்றும்; இலங்கைத் தமிழர் நிலைமைகள் குறித்து செயற்குழுவினரால் எடுக்கப்பட்ட தீர்மானம் இன்று வெளியிடப்படும் என்றும் செயற்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## காயமடைந்தோர் –

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதராசா [புங்குடுதீவு], நவரத்தினம்(17 வயது)கண்ணாதிட்டி, யாழ்ப்பாணம்., சிவராசா [23 வயது) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்., செல்வராசா யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் செல்வரத்தினம் (வ. பி. போ. ச. சாரதி), இளங்கோவளவன் (கில்னர் லேன், யாழ்ப்பாணம் பி. பொன்னம்மா [60 வயது] காங்கேசன்துறை. ராஜா குணரத்தினம் (35 வயது) ஒட்டிசுட்டான், ராஜன் [22 வயது] கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம், எஸ். சந்திரன் யாழ்ப்பாணம், அ. இராமன் பிறவுண் வீதி யாழ்ப்பாணம், பாலேந்திரன் யாழ்ப்பாணம், பொன்னுத்துரை கொட்டடி, சுகுமார் [27 வயது] யாழ்ப்பாணம், மனோகரன் [21 வயது[, ஸ்ரீதரன் [22 வயது] பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம், வி. மகேஸ்வரன் [14 வயது], வேலு [30 வயது[ உடையார் கட்டு யாழ்ப்பாணம், அழகர்சாமி [25 வயது ], ஈ. ரவீந்திரன் சிவன் கோவில் வடக்கு வீதி யாழ்ப்பாணம், திலிபன் [25 வயது] 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். எஸ். ஆனந்தன் [24 வயது] சுன்னாகம் சிவலோகநாதன் ]22 வயது] அச்சுவேலி வடக்கு அச்சுவேலி, சுப்பு [26 வயது] யாழ்ப்பாணம் செல்வநாயகம்ரணதுரை [23 வயது] வசாவிளான், செல்வராசா [22 வயது] ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், சரவணபவான் கோப்பாய்தெற்கு புவனேந்திரன் (22 வயது] சுழிபுரம், சந்திரகுமார் [18வயது] நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம், செல்லத்துரை யாழ்ப்பாணம், ராஜ்குமார் ]22, வயது] யாழ்ப்பாணம், விமலதாஸ் யாழ்ப்பாணம் வீ. சேகர் [35 வயது] ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், மயில்வாகனம் [24-வயது] ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம், கணேசலிங்கம் [21 வயது]2-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம், ரகு [20 வயது] திருநெல்வேலி, ஸ்ரீகாந்தா [17-வயது] யாழ்ப்பாணம், எம். ராஜ்குமார் அராலி வடக்கு அராலி, கே. பாலச்சந்திரன் [21 வயது] கல்வளை, மஸ்கின் சாகிட் நசீர் [23வயது] யாழ்ப்பாணம், எஸ். அருமைத்துரை [21 வயது] யாழ்ப்பாணம், எஸ். பாலசிங்கம் அரியாலை, சிதம்பரம் செல்லத்துரை யாழ்ப்பாணம், சந்தனமூர்த்தி [30 வயது] வேலணை.

## யாழ். மாநகர சபையின்

# புதிய அலுவலகத் திட்டம்:

## பன்முக நோக்கின் வெளிப்பாடு

சி. குணசிங்கம்
(யாழ். மாநகரச்சபை செயலக புதிய கட்டிடக் கலைஞர்கள் குழுத் தலைவர்)

யாழ். மாநகரசபை புதிய அலுவலகக் கட்டடம், நல்லூரில் முத்திரைச் சந்தைச் சந்திக்கண்மையாக அமைக்கப்படவுள்ளது. பருத்தித்துறை வீதிக்கும், சங்கிலியன் வீதிக்கும் இடையில் பரந்துகிடக்கின்ற, நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் அமையவுள்ளது. இக்கட்டிடம் மாநகர சபையினது சகல அலுவல்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ளது.

கட்டிடக் கலைஞர் திரு. சி. குணசிங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

புதிய அலுவலகக் கட்டிடத்தை அமைக்க முற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பல மாதங்களின் முன்பு சுப்பிரமணியம் பூங்காவை முன்றலாகக்கொண்ட அழகிய சிலைபோன்ற மாநகர சபை மண்டபம் துரதிர்ஷ்டவசமாகப் பாதிக்கப்பட்டது. இதனை அடுத்து அக்கட்டிடம் பொதுமக்களுக்குப் பாவிக்க முடியாத நிலையேற்பட்டது. இதன் காரணமாகத் தற்சமயம் ஸ்ரான்லி வீதி, அம்மன் வீதி, நல்லூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற வெவ்வேறு கட்டிடங்களில் மாநகர சபையின் வெவ்வேறு பகுதிகள் இயங்கி வருகின்றன. இவ்வாறு இயங்கி வருவது அலுவலங்களில் வேலை செய்து வருகின்ற அலுவலகர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் வசதியீனத்தையும், சிரமத்தையும் ஏற்படுத்துகின்றது. சபையின் அலுவல்களை கொண்டு நடத்தும் உயர் அலுவலர்கூட பல பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்தோடு கணிசமான வாடகைப்பணம் மேற்படி கட்டடங்களுக்கு மாநகரசபை அலுவலகத்தினால் மாதா மாதம் கட்டப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாக சபையின் அனைத்து அலுவல்களையும் உள்ளடக்கியதாக ஒரு புதிய கட்டிடம் அமைக்க முற்படுவதற்கான சூழ்நிலை உருவாகியது.

மேற்படி புதியகட்டிடத்தை எங்கு அமைப்பது எவ்வாறு அமைப்பது என்ன கட்டிடக் கலை வடிவமைப்புக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது என்பனபோன்ற விடயங்கள் மாநகரசபை உயர் அலுவலர்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள் பலரை உள்ளடக்கிய குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை காலமும் யாழ். மாநகரசபை இயங்கிவந்து, தற்சமயம்அக்கட்டிடம் பாதிக்கப்பட்ட அதே நிலப்பரப்பு மீண்டும் புதிய கட்டிடம் அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட முடியாத நிலை காணப்பட்டது. இதற்காக காரணங்களில் முதலாவது அந்நிலப்பரப்பு மிகச் சிறிதாகவுள்ளதால், மாநகரசபையின் எதிர்கால விஸ்தரிப்பை உள்ளடக்கியதான ஒரு கட்டிடத்தை அமைப்பதற்கு இந்நிலம் போதியதாகக் காணப்படவில்லை. அப்படி அமைப்தானால் மிக உயர்ந்த, பல மாடிகளைக்கொண்டஒரு கட்டிடமே அமைக்கமுடியும். ஆனால் தொழில்நுட்ப கட்டிடக்கலையியல் காரணங்களினால் மேற்படி 'உயர்ந்த கட்டிடம்' உகந்தவொன்றெனக் காணப்படவில்லை.

இரண்டாவதாக மேற்படி நிலத்தின் தென்பகுதி கடலினாலும், மேற்குப்பகுதி பொலிஸ் நிலையம், கோட்டை போன்றவற்றினாலும் வடக்கு, கிழக்குப் பகுதிகள் வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றினாலும் மிகவும் அடர்த்தியாகக் காணப்படுகிறது. எனவே இந்நிலப்பரப்பின் சூழல் நிச்சயமாக மாநகர சபையின் எதிர்கால வளர்ச்சியை அனுமதிக்காத ஒன்றாககவே காணப்படுகின்றது. மேலும் தற்போதைய தற்காலிக சூழ்நிலையில் அவ்விடத்தில் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளுவது சாத்தியமற்றது. இவற்றின் காரணமாக மேற்படி புதிய கட்டிடத்தை அமைப்பதற்கு ஒரு புதிய நிலப்பரப்புத் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலையேற்பட்டது.

நல்லூரில் முத்திரைச்சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதிக்கும் சங்கிலியன் வீதிக்கும் இடையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பு புதிய கட்டடத்தை அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டது. இத்தெரிவு மேற்குறிப்பிட்ட பொறியியலாளர், கட்டிடக் கலைஞர்கள், உயர் அலுவலர்கள் உள்ளடக்கிய குழுவில் பல கோணங்கள் ஆராயப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அதிகளவு விஸ்தீரணம் சொண்டதாகவும் தனியுடைமையின்கீழ் பெறக்கூடியதாகவும் இந்த ஒரேயொரு நிலப்பரப்பு மட்டுமே காணப்பட்டது. இதில் சபையின் எதிர்கால வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட வேறு பல கட்டடங்களும் அமைக்கப்படக்கூடிய வாய்ப்புண்டு. உபநூல் நிலையம், கலையரங்கம், பூங்கா போன்றவை கருத்தில் கொள்ளப்படக்கூடியவை. மேலும் இப்புதிய கட்டடம், யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்தும், யாழ். நகரில் இருந்தும் கணிசமானளவுசமதூரத்தில்அமையவிருப்பதால், எதிர்காலத்தில் மிகப்பரந்தளவிலான நகர வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக அமைகிறது. தற்சமயம் யாழ்,நகரமானது மிகவும் அடர்த்தியானதாகவும், போக்குவரத்து, வாசனத்தரிப்பு போன்றவற்றிற்கு இடைஞ்சல்களையும், மேலும் பல பிரச்னைகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. எனவே மேற்படி புதிய மாநகரசபை கட்டிடம், அதிகளவு அடர்த்தியான இந்த நகர எல்லையினுள் இருந்து சிறிதளவு தூரத்திற்குத்தள்ளி அமையும்போது எதிர்கால நகரவளர்ச்சி பருத்தித்துறை வீதி, கண்டி வீதி, கச்சேரி நல்லூர் வீதி ஆகியவற்றை அண்டி ஆரம்பிக்கும். காரியாலயங்கள், வியாபார நிலையங்கள் போன்றவை இவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அமைக்கப்படும்போது, தற்சமயம் நகரப்பகுதியினுள் உள்ள அதிகளவு பிரச்னைகள் மேலும் அதிகரிக்காமல்கட்டுப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகளுண்டு. நகரின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவரும் மக்கள் நேரடியாக மேற்படி கட்டடத்திற்கு வந்து செல்லக்கூடிய வருகையில் போக்குவரத்து வசதிகள் எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்படும். உதாரணமாக சாவகச்சேரி,கொடிகாமம் போன்ற பகுதிகளில் இருந்து வரும் பஸ் வண்டிகளில் ஒரு பகுதி செம்மணி வீதியூடாக புதிய கட்டிடத்தை அண்மித்துப் பருத்தித்துறை வீதி வழியாக யாழ். நகரைச் சென்றடையக் கூடியதாக மாற்றியமைக்கப்படலாம். இதேபோன்று காரைநகர், கீரிமலை, பலாலி போன்ற இடங்களில் இருந்து வரும் பஸ்வண்டிகளும் மாற்றியமைக்கப்படலாம். மேலதிகமாக யாழ். நகர், கச்சேரி, புதிய மாநகரசபை கட்டடம் என்பவற்றை உள்ளடக்கிய 'வட்ட பஸ்சேவை'யும் அறிமுகப்படுத்தப்படலாம். பொதுவாக மேற்படி புதிய கட்டிடம் அமையவிருக்கும் நிலப்பரப்பு. யாழ். நகரினது நீண்டகால வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளுமிடத்து மிகவும் பொருத்தமானதாகவே காணப்படுகிறது.

யாழ். மாநகரசபை அலுவலகம் என்பது யாழ்ப்பாணத்தில் வாழும் அனைத்து மக்களினதும் தேவைகளை உள்ளடக்கிய ஒரு அலுவலகமாகும். அத்துடன் இப்புதிய கட்டிடமானது யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற மக்களது பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற வடிவியற் கலையை உள்ளடக்கியதாக அமைக்கப்படவேண்டும். பாரம்பரியக்கட்டிட அமைப்பு முறை, பொதுவாக மக்களது வாழ்க்கை முறையினைப் பிரதிபலிப்பவையாகப் பல ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார். எனவே ''பாரம்பரிய கட்டிடக் கலை'' இப்புதிய கட்டிடத்தில்கையாளப்படும் போது அது யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற மக்களினது வாழ்க்கை முறையினைப் பிரதிபலிப்பதாகவே அமையும். அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட நிலமானது சரித்திரப் பிரசித்தி பெற்ற சங்கிலி அரசனின் இராஜதானியாகிய சங்கிலித் தோப்பில் அமைவதால்; இப்புதிய கட்டிடம் ஓரளவிற்கு அதனைப் பிரதிபலிப்பதாகவும் அமைக்கப்படலாம்! அத்துடன் இன்றைய காலகட்டத்தில், கட்டிடக் கலையாவது பொறியியல், தொழில்நுட்ப ரீதியில் மிகவும் வளர்ச்சியடைந்து காணப்படுவதால், புதிய கட்டிடம் இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். புதிய கட்டிட வடிவமைப்பு, சாதாரணமாக இரண்டு மாடிகளைக் கொண்டதாகவும், சில பகுதிகள்மூன்று அல்லது நாலு மாடிகளைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தில் மாதிரி அமைப்பொன்று (Model) தற்சமயம் யாழ். மாநகரசபையின் ஒரு பகுதி இயங்கிவரும் நல்லூரில் உள்ள ''இந்துவிடுதி'' மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

---

## யாழ். மாவட்ட வீடமைப்புக்கு 51 லட்சம் 16 ஆயிரம் ரூபாய்!

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திற்கு வீடமைக்கும் முயற்சிக்கென ஐம்பத்தொரு லட்சத்துப் பதினாறாயிரம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இப்பணம் [1048] ஆயிரத்து நாற்பத்தெட்டு குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். கிராமிய அபிவிருத்தி வீடமைப்பு உப திட்டத்தின் கீழ் இப்பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. [ஐ]

---

## புதுவிதமாகப் பணம் பறிக்கும் கோஷ்டி

[யாழ்ப்பாணம்]

வெளிநாடுகளில் இருக்கும் இளைஞர்களின் நண்பர்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்திப் பணம் அபகரிக்கும் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

ஒருவர் எந்த நாட்டில் நிற்கிறார்அவரின்பெயர்என்ன? என்பன போன்ற சகல விபரங்களையும் தெரிந்து வைத்துள்ள இக்கோஷ்டியே இவ்வாறு தமது காரியத்தைச்சாதிக்கிறது

இந்த ஏமாற்றுக் கோஷ்டியிடம் சங்கானையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் இருமுறை அகப்பட்டும் புத்திசாலித்தனமாக பணத்தைப் பறிகொடுக்கவில்லையாம்

தமது மகனின் பெயரையும் அவர் இருக்கும்வெளிநாட்டையும் சரியாகக்கூறி தானும் அவருடன் வெளிநாட்டில் இருந்து வேலைசெய்துவிட்டுஇப்போது தான் இங்கு வந்ததாகவும் மகன்கொடுத்தனுப்பிய பொருட்களை எடுத்துவர பணம் தரும்படியும் இந்த ஏமாற்றுக்காரர் தம்மிடம் கேட்டதாகவும் அவர்கள் மேல் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டதால் தாம் பணம் கொடுக்க மறுத்ததாகவும் இவ் வயோதிபர் தெரிவித்தார். [ஐ]

---

## 6,000 தமிழர்.,.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இன வெறி அரசால் அகதிகளாக்கப்பட்டுள்ளதமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க தமிழ் மக்கள் தாராளமாக முன்வர வேண்டும்' என்றார்.

இக்கூட்டத்தில் மகளிர் அவைப் பேச்சாளர் திரு. இ முருகையா, அகதிகள் புனர்வாழ்வுக்கழகச் செயலர் திரு. எஸ். கனகசபாபதி, மற்றும் திருவாளர்கள் எஸ் ரி. பத்மநாதன், என். இரத்தினசிங்சம். என். செல்வரத்தினம். இ. அரசகேசரி, திருமதி க. பூ கருணைநாதன் வேல் முருகு, த. ம. அவைத்தலைவி செல்வி கு. மேகலா உட்படப் பலர் பேசினார்கள். [ஐ]

---

## இருந்தும்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை ஆறு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை மின் ஒளி மிகக் குறைந்த நிலையில் இருப்பதால் அந்நேரத்தில் பாடசாலைப் பிள்ளைகள் படிக்கவோ,பத்திரிகை வாசிக்கவோமுடியாது உள்ளது.சந்தரோடை உப மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெற்றபோது கூட இவ்வளவு குறைந்த மின் ஒளியை அவர்கள் பெறவில்லை என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைபாட்டை நிவர்த்திக்க வேண்டும் என்றும் மின்பாவனையாளர்கள் கருதுகின்றனர்.

---

## இன்றைய பலன்

மாதம் மார்கழி 22
(1986-1-6) திங்கள்
திதி ஏகாதசி பின் இரவு வரை
நக்ஷத்திரம் விசாகம் பின் இரவுவரை

மேடம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படும் கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். சமயே சிதபுதியுடன் நடந்துகொள்க.

இடபம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் புத்திரவழியாயாலும் மகிழ்ச்சியுண்டு.

மிதுனம்: தொல்லைகள் தலைதூக்கும் தொழில்புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கும் இடமுண்டு வழக்கு விவகாரங்களில் திருப்திகுறையும்

கடகம்: தன்மான மிகுதிக்கும் தனவரவிற்கும் இடமுண்டு சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும், குடும்பத்தில் தென்றல் வீசும்.

சிங்கம்: மகிழ்ச்சிகரமான தினம். தொழிலாலும் சிறப்புண்டு. மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

கன்னி: இலட்சியப்பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவம் உண்டு. பிள்ளைகளாலும் முன்னேற்றம் உண்டு.

துலாம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரை முடிவில்லையை விரிக்கக்கூடும் நிதானம் வேண்டும்.

விருச்சிகம்; குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். சிறுவிடயத்துக்குகூட மற்றவர்கள் குறைகூறுவார்கள் வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரத்தைப் பேணவும்.

தனுசு: சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக்கொள்ளுவீர்கள். இல்லறத்தில் அமைதி நிலவும் பூமியால் லாபமுண்டு.

மகரம்: நினைத்தது நடக்காது நிதியில் முடக்கமுண்டு பூமிப்பிணக்கும் தலைகாட்டக் கூடும். அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும்.

கும்பம்: எதிர்பாராத பிரயாணம் ஒன்று இன்று ஏற்படலாம், முன்னாள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும்.

மீனம், அறவழியில் நாட்டம் செல்லும் வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும் சுற்றவர்களின் வாழ்த்தும் கண்டிப்பாக உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## பஸ்சேவை மீண்டும் ஆரம்பமானது

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கும் பூநகரிக்குமிடையிலான இ. போ. ச. பஸ்சேவை நீண்டகால இடைவெளியின்பின் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. பிரஸ்தாப பஸ்சேவைநிறுத்தப்பட்டிருந்ததால் பூநகரிக்கான தூரஇடங்களின் தபல்சேவையும் பெரிதும் பாதிப்படைந்திருந்தது.

கிளிநொச்சி பூநகரி முதலான பகுதிகளின் பிரஜைகள் குழுக்களும் பல்வேறு பொதுஸ்தாபனங்களும் விடுத்த வேண்டுகோளை அடுத்து கிளிநொச்சி இ. போ. ச டிப்போ அத்தியட்சகர் திரு. கந்தையா பூநகரிக்கான பஸ்சேவையை மீண்டும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த பஸ்சேவையை பல்லவராயன்கட்டு அகதிகள் குடியேற்றமான தும்புறுவில், ஜெயபுரம் முதலான பகுதி மக்களும் நன்மை அடையும் வகையில் பல்லவராயன்கட்டு வரை நீடிக்கவும் டிப்போ அத்தியட்சகர் திரு. கந்தையா நடவடிக்கை எடுத்துவருகிறார்.

### வீடமைப்புத்திட்டம்:
# இலங்கை ரீதியில் வவனியா, முல்லைத்தீவு 2-வது இடம்

(யாழ்ப்பாணம்)

''பத்து லட்சம் வீடமைப்பு திட்டத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரை வவனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் அகில இலங்கையிலேயே இரண்டாவது இடத்தை வகிப்பதனல் மாங்குள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் மிகுந்த பெருமிதத்துடன் வருட இறுதிக் கொண்டாட்டத்தை விமரிசையாக கொண்டாடுவதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள்'' இவ்வாறு மாங்குளம் தேசிய வீடமைப்பு அதிகார சபை நலன்புரிச்சங்கத்தினல் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற வருட இறுதிக்கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய மேற்படி சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் கூறினர். இவ்வைபவத்திற்கு நலன்புரிச்சங்கத்தலைவர் திரு. த. சிவநாதன் தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; ''பொதுவாக அலுவலகங்களில் இயங்குகின்ற நலன் புரிச்சங்கங்கள் சிலகுறிப்பிட்ட நோக்கங்களை வைத்தே இயங்குகின்றன. ஆனல் மாங்குள தே. வீ. அ. சபையில் இயங்குகின்ற நலன்புரிச்சங்கம் மற்றச் சங்கங்களுக்கு எடுத்துக்காட்டாக பிரதமரின் பத்து லட்சம் வீட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கும் அயராது பாடுபட்டு உழைக்கின்றது'' என்ருர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மன்னர் மாவட்ட முகாமையாளர் வே. சிறீஸ்கந்தவேல் தனது உரையில்; வீடமைப்பு அபிவிருத்தியை பொறுத்தவரை தமிழ் மாவட்டங்களிலேயே முதலிடத்தை வகிக்கின்ற மாங்குள அலுவலகத்துடன் ஒன்றிணைந்து எமது அலுவலகமும் எதிர்காலத்தில் ஊழியர் நலன்புரிச்சங்க நடவடிக்கைகளில் சேர்ந்து செயல்படவேண்டும், மிகக்குறுகியகாலத்திலேயே வியத்தகுவளர்ச்சியை அடைந்திருக்கின்ற இந்நலன் புரிச்சங்கம், ஏனைய நலன்புரிச் சங்கத்திற்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும் என்று குறிப்பிட்டார்.

அலுவலகத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் வேலைப்பரிசோதகர் திரு. கு. உதயகுமாரன் கணக்கு இலிகிதர் செல்வி இ ரஜனி ஆகியோருக்கு சேவை நலன் பாராட்டு வைபவமும் இடம்பெற்றது. வைபவத்தில் எஸ். சோதிமூர்த்தி அ.பாஞ்சாலி, பா.சிவநாதன், ரி. குகதாசன், எஸ். செல்வராஜா, வி. செல்வநாயகம், எஸ். கணநாதன் ஆகியோர் உரையாற்றினர்கள். சங்கத்தின் செயலாளர் து.மணிசேகரன் நன்றியுரை வழங்கினர்.

---

# 'ஒழுக்க உணர்வு வளர்க்கப்படவேண்டும்'

[மானிப்பாய்]

,,மாணவர்களிடையே ஒழுக்க உணர்வு ஆரம்பத்திலிருந்தே வளர்க்கப்படவேண்டும். இதுவே சமுதாயத்துக்குப் பின்னர் மிகவும் உதவியாக இருக்கும். இதன் நோக்கத்தை நன்கு உணர்ந்து இவ் விஷயத்தில் சம்பந்தம்பட்ட எல்லோரும் ஒத்துழைக்க முன்வரவேண்டும்.''

என யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினர்.

நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசரவணபவன் மேலும் பேசுகையில்; கல்லூரியின் பாதுகாப்பு வளர்ச்சியில் இவை சம்பந்தமாகப் பெற்ருேரும் பழைய மாணவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்த வாரத்தில் பாடசாலை வாரம் கல்லூரியில் கொண்டாடப்பட விருப்பதாகவும் இதில் பெற்ருேர் பழையமாணவர் கலந்து பாடசாலையில் சிரமதானம் மூலம் செய்யப்படக்கூடிய வேலைகளைச் செய்ய உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கல்வித் துறையில் கல்லூரி அடைந்துவரும் முன்னேற்றங்கள் பற்றியும் கல்லூரி அதிபர் எடுத்துக் கூறினர்.

கல்லூரியின் முன்பக்கச் சுவர் உயர்த்தல், கல்லூரியின் மேற்கு மண்டபத்தை அறைகளாக்குதல், ஆசிரியர் பற்ருக்குறை, மீண்டும் க. பொ. த. உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவை கல்லூரியில் நடந்த ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளுதல் ஆகிய விஷயங்கள் சம்பந்தமாகக் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இவற்றில் சில விஷயங்கள் தொடர்பாக வடபிராந்திய கல்விப்பணிப்பாளரை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்று விரைவில் சந்திக்க விருப்பதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

திருவாளர்கள் எஸ். ராஜதுரை, எல். பக்கீரிசாமி, கே. வி. ஜெயலிங்கநாதன், ஜனுப் எம். எஸ் றஹீம் ஆகியோரும் பேசினர். காரியதரிசி திரு. மு. ஜெகதீசன் நன்றி கூறினர்.

---

## இன்று பிரவேசப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 'ஆண்டு ஏழு' வகுப்பில் சேர்வதற்கு விண்ணப்பம் செய்துள்ள மாணவர்களுக்கான பிரவேசப் பரீட்சை இன்று 6ம் திகதி நண்பகல் ஒரு மணிக்கு நடைபெறும். (ஐ)

---

## பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

தொலை தொடர்பு பரிவர்த்தனை நிலைய இரவுப் பொறுப்பதிகாரி திரு. பி. கந்தசாமி ஓய்வு பெறுவதையொட்டி இன்று திங்கட்கிழமை தொலை தொடர்பு நிலைய ஊழியர்களால் பிரிவுபசார விழா நடாத்தப்படவுள்ளது. இவர் 25 வருடம் சேவையாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரது இடத்திற்கு கிளிநொச்சி தபால் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. வி. எஸ் சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். (மா)

---

## மாணவர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணர்பண்ணை செட்டித்தெரு தமிழ்க்கலவன் பாடசாலையில் சிரமதானப் பணியை மேற் கொண்ட பாடசாலை பழைய மாணவர்களும், அப்பகுதி பொது மக்களும் பாடசாலை முன்புற வேலியிலுள்ள பாரிய மரங்களை அகற்றி எல்லையை சீரமைத்தனர். பழைய மாணவர்களின் முன்மாதிரியான சேவையை பாடசாலை அதிபர் பாராட்டியுள்ளார். [ச]

---

# ரூபவாஹினி

மாலை:

5-00 செய்திகள்
5-05 'இட்ஸ் நொட்மை போல்ட்'
5-30 'த வோட்டர்வில் கேங்'
6-00 சிங்கள நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 இளைஞர் நிகழ்ச்சி
7-25 'த லிவ்விங் பிளனட்
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 த லிவ்விங் பிளனட் (தொடர்)
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 'வெப்ஸ்டர்' ஹாஸ்சிய நவீனம்
9-50 விஞ்ஞான நிகழ்ச்சி
10-40 ஒளிபரப்பு முடிவு

---

## கீரிமலை பயணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை பொதுசன போக்குவரத்துச்சேவை பயணிகள் சங்க ஆரம்பக் கூட்டம் கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றிலில் அண்மையில் நடைபெற்றது. சங்கத் தலைவராக சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்களும் செயலாளராக செ. குமாரசுவாமியும் உதவிச் செயலாளராக சி. கதிர்காமத் தம்பியும் பொருளாளராக வி. எஸ். கணேசலிங்கமும் தெரிவு செய்யப்பெற்றனர்.

பத்து பேர் கொண்ட நிர்வாக சபைக்குழுவும் தெரிவாகியது.

கீரிமலை சிவன் கோவிலுக்கும், கீரிமலை புண்ணிய தீர்த்தத்துக்கும் செல்வோரின் பயண வசதியை உறுதி செய்வது பற்றி ஆராயப்பெற்றது.

---

## நாளை பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

1985ம் ஆண்டு க, பொ. த. உயர்தரப் பரீட்சையில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் அதிக தொகையினராகவும், சிறப்பாக சித்தியடைந்தமை குறித்து அம்மாணவர்களையும். ஆசிரியர்களையும் கௌரவித்து இக்கல்லூரியின் பழைய மாணவர்சள் பாராட்டு வைபவமொன்றை நடத்தவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை இவ்வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்பாராட்டு விழாவில் முதன்மை அதிதியாகக் கல்வி அதிகாரி திரு. வீ. தங்கராசாவும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி, வர்த்தக வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா, விஞ்ஞான வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். நடராசா ஆகியோர் பங்கு பற்றுவார்கள்,

---

## வைத்தீஸ்வரா கூரையும் சேதம்

(மானிப்பாய்)

சென்ற சனிக்கிழமை யாழ். நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் யாழ். வைத்தீஸ்வரவித்தியாலயமண்டபக்கூரையும் சேதமாகியது.

பிரதான மண்டபம், உதவி அதிபர் காரியாலக் கூரை, தேநீர்ச்சாலைக்கூரை ஆகியன சேதமடைந்துள்ளன.

---

# மூன்று கிராமங்கள் ஒளி பெற்றன

[வவனியா)

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வவனியாவில் உள்ள மூன்று கிராமங்கள் மின்னெளி பெற்றுள்ளன.

மநாச்சிமோட்டை, சாஸ்திரி கூழாங்குளம் ஓமந்தை ஆசிய மூன்று கிராமங்களுமே ஒளி பெற்றன.

நொச்சிமோட்டை, சாஸ்கிரி கூழாங்குளம் பிரதேசங்களுக்கான மின் இணைப்பினைத் துட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் தொடக்கிவைத்தார்.

ஓமந்தைப்பகுதிக்கான மின் இணைப்பை வவனியா அரசாங்க அதிபர் திரு. க. ஸி. லோகேஸ்வரன் ஆரம்பித்துவைத்தார். இவ்வைபவத்தில் வவனியா நிகழ்ச்சி திட்ட இயக்குநர் திரு. ரீ. இலங்கா நேசனும் கலந்து கொண்டார்.

குறித்த மூன்று மின் இணைப்புத் திட்டங்களுக்கும் உலக வங்கி நிதியில் 57 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. வைபவம் தொடர்பான ஏற்பாடுகளை வவனியா தெற்கு தமிழ் பிரிவு உதவி அரச அதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை செய்துள்ளார்.

---

# ஆசிரியரை விடுவிக்குமாறு பிரஜைகள்குழு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''பூநகரி முழுங்காவில் அரசினர் பாடசாலையில் கல்வி கற்பித்து வந்த உதவி ஆசிரியர் மார்க்கண்டு, சிவபாலசுந்தரம் என்பவர் தனது சொந்த இடமான மூதூர் கட்டைடறிச்சானுக்கு பஸ் மூலம் சென்றவர் ஹபறணைச் சந்தியில் பாதுகாப்புப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாக அறிகின்ருேம். அவரை விடுதலை செய்ய உதவுமாறு பூநகரி பிரஜைசள் குழு கேட்டுக் கொள்கின்றது'' என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயலாளருக்கு பூநகரி பிரஜைகள் குழு சார்பில் தலைவர் திரு. பொ தங்கராசா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

# இந்த ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்டத்தில் இடம்

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களுக்கு முதன் முறையாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர் கலாசாலைகளில் ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொள்ளும் ஆசிரியர்கள் முன்னரெல்லாம் உடனடியாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவதில்லை இவர்கள் தென் பகுதிகளுக்கே அனுப்பப்படுவது வழக்கம். ஆனல் இம்முறை கோப்பாய் ஆ. ப. கலாசாலையிலிருந்தும் மட்டக்களப்புக் கலாசாலையிலிருந்தும் வெளியேறிய ஐம்பத்தொன்பது ஆகிரியர்களுக்கு யாழ். மாவட்டப்பாடசாலைகளில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் யாழ். கல்வி மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பகுதிகளாக கணிக்கப்படும் பருத்தித்துறை கிழக்கு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் வேறு சில கல்வி வட்டாரங்களில் உள்ள பின்தங்கிய இடத்துப் பாடசாலைசளுக்கு அனுப்பப்படவுள்ளனர். பெண்களின் நன்மைகருதி இவர்சள் தீவுப் பகுதிகளுக்கு அனுப்பப்படமாட்டார்கள்.

தமிழ் மொழி மூலம் பயிற்சி நமைபெறும் நாட்டிலுள்ள ஐந்து ஆசிரியர் கலாசாலைசளிலிருந்தும் கடப்த ஆண்டு பயிற்சி முடித்துக்கொண்டு ஐந்நூற்று அறுபத்தேழுஆசிரியர்கள் வெளியேறியுள்ளனர். (ஐ)

---

## இடமாற்றம்

[உடுவில்]

சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஸ்ரீகந்தராசா யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கலலூரிக்கு உப அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் வணிகத்துறைப் போதனசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஸ்ரீகந்தராசா கடந்த ஆண்டு பதவி உயர்வுடன் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் அதிபராகக் கடமையேற்ருர். வணிகத்துறையில் எம்.ஏ.பட்டம்பெற்ற இவர் வருகையால் தொழில்நுட்பக் கல்லூரியின் தரம் மேலும் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணைப்பு அதிபராக, யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி போதனசிரியர் திரு. எஸ். கயிலைநாதன் இடம் பெற்றுள்ளார்.

---

## பேச்சுப்போட்டி முடிவுகள்

(புங்குடுதீவு)

ஊரைதீவு தமிழ் மாதர் கழகத்தினர் ஊரைதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலை மண்டபத்தில் நடத்திய ஆயத்தமின்றிப்பேசும் போட்டியில் முதலாமிடத்தினை தி. ஸ்ரீதரனும், இரண்டாமிடத்தை செ. நித்தியானந்தனும், மூன்ருமிடத்தை த. பிறேமானந்தனும் பெற்றனர்.

மாணவர்களுக்கிடையேயான போட்டிகளின்போது மேற்பிரிவில் மு. நந்தகுலசிங்கம், நீ. உஷ தேவி, ந. விக்னேஸ்வரி ஆகியோர்முறையே முதலாம். இரண்டாம், மூன்ரும் இடங்களைப்பெற்றனர்.

மத்தியபிரிவில் ம. கலாரஞ்சினி முதலாவதுஇடத்தையும், ப. குகலேந்திரன் இரண்டாவது இடத்தையும், சோ. உதயணன் மூன்ருமிடத்தையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவுக்கான போட்டியில் ப. குணேந்திரன் முதலாவதிடத்தைச் சுவீசரித்துக் கொண்டார். ந. கலையரசி இரண்டாமிடத்தையும், த. ஸ்ரீ குகானந்தன் மூன்ருமிடத்தையும் பெற்றனர்.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனை பிரதம நடுவராகக் கொண்டு, கே. ஜி. ராஜா, செ. பூபகாந்தன், திருமதி சந்திராகோபால், செ. நித்தியானந்தன், தி. ஸ்ரீதரன், ந. தனபாலசிங்கம், திருமதி புற்கலை பாஸ்கரன் ஆசிரியை த. பிறேமானந்தன், செல்வி சு. மோகனராணி ஆசிரியை ஆகியோரை உள்ளடக்கிய நடுவர்குழு ஒவ்வொரு பிரிவுக்கும் மூவர் வீதம் செயற்பட்டு தீர்ப்புக்களை வழங்கியது.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## கிழக்கு மாகாண சம்பவம்: "நால்வர் சுட்டுக்கொலை"

(கொழும்பு)

மட்டக்களப்பு சித்தாண்டி பகுதியில் பாதுகாப்புப் படையினர் நேற்று முன் தினம் ரோந்து சென்றபோது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதாகவும் பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளின் தாக்குதல்களை முறியடித்துள்ளதாகவும் அரசு வரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இக் சம்பவத்தின் போது மூன்று தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் 'லங்கா புவத்' தெரிவித்துள்ளது.

பள்ளிக் குடியிருப்பில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் லெபனானில் பயிற்சி பெற்ற சுரேஷ் எனப்படும் தீவிரவாதி பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (து)

## சிறுவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி 22-ம் வாட்டில் மூளைக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இரு சிறுவர்கள் நேற்றும் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த செந்தூரன் (5 வயது) கிளிநொச்சியைச் சேர்ந்த பிலிசா (4 வயது) ஆகியோரே அனுமதிக்கப்பட்ட சிறுவர்களாகும்.

# 20,000 சிங்கள இளைஞர் கொல்லப்பட்டபோது திருமதி சிறிமா அரசியல் தீர்வையா விரும்பினார்

### ஊழியர் சங்க கூட்டத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

"இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இராணுவத்தீர்வு அல்லாது அரசியல் தீர்வுபற்றியே சிலர் பேசிக்கொள்கிறார்கள். யார்தான் இந்த இராணுவத் தீர்வை விரும்புகின்றார்கள்?"

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற இலங்கைத் தோட்டத்துறை ஊழியர் சங்க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1971-ம் ஆண்டு கிளர்ச்சி நடந்தபோது ராணுவத்தீர்வை விரும்பினார். இருபதினாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது அவர் அரசியல் தீர்வையா விரும்பினார்? தென் பகுதியிலுள்ள சிங்கள மக்களை கொலை செய்பவர்களோடும், மக்கள் விடுதலை முன்னணியுடனும் அவர் கண்ட அரசியல் தீர்வுதான் என்ன? அப்போது எதிர்கட்சியிலிருந்த நான், அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்துபவர்கள் எவராக இருந்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்று கூறி திருமதி பண்டாரநாயக்காவுக்கு பூரண ஆதரவைக் கொடுத்தேன். ஆனால் இன்று அவர் அரசியல் தீர்வு பற்றியே கூறுகின்றார்.

1971-ம் ஆண்டு அவர் செய்ததை ஏன் இன்று முன்மாதிரியாக கொள்ளக் கூடாது? அவர் அர்த்தமற்ற விதத்தில் பேசி வருகிறார்" என்றும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார். [து]

## கல்வி பாதிப்பு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியிலுள்ள மக்கள் தினமும் இரவு நேரங்களை இருளில் கழிக்கவேண்டிய நிலையிலிருப்பது பற்றிக்கவலைதெரிவித்துள்ளனர்.

மின்சாரம் அதிகமாக இரவு 6 மணியிலிருந்து 3மணிவரை தடைப்பட்டு விடுவதால் பாடசாலை மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசுபெற்றனர்

(உடுவில்)

உடுவில் சிவஞானப்பிள்ளையார் கோவில் சிவஞானவாரியம் நடத்திய சமயக்கட்டுரைப் போட்டியில் பின்வருவோர் பரிசுபெற்றனர்.

கீழ்ப்பிரிவு செல்விகள் மு. பத்மலோசினி, தி. சிவப்பிரியா, வ. தர்சினி மத்தியபிரிவு செல்வன்கள் இ. பிரபாகரன், வ. ஹேமநாதன், செல்வி ம. மகாதட்சணி, மேற்பிரிவு செல்விகள் செ. சசிவதனா, து. சிவமதி, செல்வன் வை. தங்கராசா

திருவாதிரை ரதோற்சவத்தின்று சிவஞான வாரியத்தலைவரும் ஆலய கர்த்தாவுமாகிய பிரம்மஸ்ரீ வ. முத்துக்குமாரசாமி சர்மா தலைமையில் நடைபெற்றபரிசளிப்பு நிகழ்ச்சியில் யாழ் இந்து தமிழ்க்கலவன்பாடசாலை அதிபர் திருஎம் திருஞானசம்பந்தபிள்ளை பரிசுகளை வழங்கினார்.

நல்லை ஆதீனத்தை சேர்ந்த கலாநிதி திரு. கனகரத்தினம் சிவஞான வாரியத்தின்சேவைகளைப் பாராட்டிப் பேசினார்

## பன்குளத்தில் பாதிக்கப்பட்ட இருவர் யாழ். வந்தனர்

[யாழ்ப்பாணம்]

திருமலையில் ஆறு மாதத்திற்கு முன்னர் சீருடையினரால் தாக்கப்பட்டதாகக்கூறப்படும் இரு சகோதரர்கள் யாழ்ப்பாணம் வந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

பன்குளம் பகுதியிலுள்ள முதலிக்குளம் பிரிவைச்சேர்ந்த இரு சகோதரர்களும் அங்கு பதற்றம் ஏற்பட்டபோது திருமலை அகதி முகாமில் தஞ்சமடைந்தனர். பின்னர் சேதப்படுத்தப்பட்ட தங்கள் வீட்டைப்பார்க்கச் சென்றுவிட்டு காட்டுப் பாதையால் அகதி முகாமிற்கு வந்துகொண்டிருந்தபோது ஊர்காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டனராம். பின்னர் இவர்கள் சீருடையினரால் தாக்கப்பட்டு திருமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றபின் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் அகதி முகாமிற்குச் சென்றுள்ளனர். [சு]

## மண்டபத்தில் கடற்படை நிலையம்

[சென்னை]

இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தலிலிருந்து இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்கென இந்தியக் கிழக்குப் பிராந்தியக் கடற்படைப் பாதுகாப்புப் படை நிலையமொன்று மண்டபத்தில் அமைக்கப்படும்.

இம்மாதம் 13-ம் திகதி இந்நிலையம் ஆரம்பிக்கப்படும். 12 கப்பல்கள் கரையோரப் பாதுகாப்புப் படையில் இயங்கும். கரையோரப் பாதுகாப்புப் படைத் தளபதி ஸ்ரீ ராமராவ் இதனைத் தெரிவித்தார்.

## வேதாரணியச் சம்பவம்

[சென்னை]

'ரெலோ' இயக்கத்தின் தலைவர் திரு. சிறீசபாரத்தினம் வேதாரணியத்தில் அண்மையில் இடம்பெற்ற துரதிஸ்ட்டவசமான சம்பவங்களை மறந்து மன்னிப்பு வழங்குமாறு தமிழக மக்களைக் கோரியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில்; விடுதலைக் குழுக்களுக்குத் தமிழ் மக்கள் அளித்துவரும் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் புரிந்து கொள்ளாதவர்கள் தம்மை விடுதலை வீரர்களென எவ்வாறு கூறமுடியும்? விடுதலை வீரர் என்ற போர்வையில் தவறான செயல்களில் ஈடுபடுவது கண்டனத்திற்குரியது என்றும் தெரிவித்துள்ளார்.

## பஸ் சீஸன்டிக்கட் 15-வரை பெறலாம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவ, மாணவிகளுக்குப் பஸ்சீசன் டிக்கட்டுகள் வழங்குவது இம்மாதம் பதினைந்தாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன. மாணவ, மாணவிகளின் சீசன் டிக்கட்டுகள் விநியோகம் குறித்து வட பி. போ. சபை கோண்டாவில் சாலை முகாமையாளருடன் 'ஈழநாடு' தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்ட விபரம் வெளியிடப்பட்டது.

வழக்கம்போல டிசம்பர் மாத பஸ் சீசன் டிக்கட் பட்டியலைச் சமர்ப்பித்து டிக்கட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்,


## மரண அறிவித்தல்

### திரு. சின்னத்தம்பு இராசா

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக்கொண்டவரும், 144/2 பிறவுன் வீதியை வசிப்பிடமாகக்கொண்டவருமான திரு. சின்னத்தம்பு இராசா (சச்சிதானந்தா ஓடிட் கம்பெனியில் கடமையாற்றியவர்) காலமாகிவிட்டார். இவர் பூமணியின் அன்புக்கணவரும், சுரேஸ்குமார் [U. K.], ரமேஸ்குமார் (கனடா), திருமதி ரேனுகா விஜயகுகன் (கனடா), திருமதி குணவதினி வடிவேல் [U. K.] ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சின்னத்தம்பு நாகலிங்கத்தின் அன்புச் சகோதரரும், திருமதி நாகலிங்கம் பொன்னம்மாவின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

C-68 தகவல்:- திருமதி பூமணி இராசா,



## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் நாகம்மா நடராசா

தெல்லிப்பளை மேற்கு, வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் நாகம்மா நடராசா காலமானார். அன்னார் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் திரு சங்கரப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மனோகரன், காலஞ்சென்ற மனோராணி, திரு. ந ஜெகதீஸ்வரன் [நிருவாக உத்தியோகத்தர், செட்டிகுளம்], ஆகியோரின் தாயாரும், திருமதி சோமதேவியின் மாமியாரும், முரளிதரன் (U K.), வித்தியாதரன் (மாணவன், யூனியன் கல்லூரி) ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 06-01-1986 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு அன்னாரது வீட்டில் நடைபெற்று, குடும்ப மயானத்தில் தகனம் செய்வதற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:- ந. ஜெகதீஸ்வரன்

[C 67]



## மரண அறிவித்தல்

### திரு. இராமலிங்கம் சபாரெட்ணம்

(சிலாபம் வர்த்தகர்)

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சிலாபம் புசையிலை வர்த்தகருமாகிய இராமலிங்கம் சபாரெட்ணம் 5-1-86ல் காலமானார் இவர் முருகாயியின் அன்புக் கணவரும், திருமதி யோகாம்பிகை நவரெட்ணசிங்கம், புலேந்திரன் (மேற்கு ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கொழும்பு 4-ம் குறுக்குத்தெரு 'உதயா ஏஜன்சி' வேலாயுதம, நவரெட்ணசிங்கத்தின் அன்பு மாமனாரும், அருள்குமரன், ஜெயகாந்தன், சுபாஜினி ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற திரு. திருமதி இராமலிங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், திருஞானம், திருமதி பரராஜசிங்கம் விசாலாட்சி, காலஞ்சென்ற குணரெட்ணம், தில்லைநாதன், திருமதி சற்குணநாதன் நாகேஸ்வரி, தனபாலசிங்கம், பாலசுப்பரமணியம் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வர்த்தகர்கள் பரராசசிங்கம், சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-1-86) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்

தகவல்:
திரு. இ. தனபாலசிங்கம்.
(சகோதரர்)

C 64


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.